Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 10ஆம் நாள் துல்கஃதா 17 (23-4-62) திங்கட்கிழமை இதழ் 71

Jegajothi TOOTH POWDER
SEKAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# அடுத்த திட்டம் என்ன?

## சைவ சமய பாட திட்டம் திருத்தப்படும்

### இலகுவாக்க கல்வி இலாகா நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவசமயபாடத் திட்டத்தை இலகுவாக்குவதற்கான முறையில் திருத்தி அமைக்க இப்போது முயற்சி நடந்துவருகிறதாகத் தெரிகிறது.

சென்ற சனிக்கிழமையன்று ஒரு சைவமாணவர் எழுதிய கடிதத்தையும் அதன் மீது 'ஈழநாடு' எழுதிய தலையங்கத்தையும்பற்றி கல்வி இலாகா அதிகாரி ஒருவரை விசாரித்ததில் அவர் இவ்விதம் தெரிவித்தார்.

சென்ற 3 ஆண்டுகளாக கிறிஸ்தவ சமயப் பரீட்சை அதிக இலகுவாகவும், இந்து சமயப் பரீட்சை வேதாந்த சித்தாந்த தத்துவங்கள் அறிய வேண்டிய முறையில் மிகக் கடினமாகவும் இருந்துவந்தன இதனல் அநேக இந்து மாணவர்கள் பிரமாணத்துக்குமாருக் கிறிஸ்தவ சமயப் பரீட்சை எழுதி சித்தியடைந்துள்ளனர்! கிறிஸ்தவ சமயபாடம் எழுதியவரில் 100க்கு 100மாணவர் சித்தியடைந்திருக்க, சைவசமய பரீட்சை எழுதிய மாணவர் 100க்கு70வீதமே சித்தியடைந்துள்ளனர்.

இதுபற்றி உதவி வித்தியாதிபதி, பரீட்சை இலாகா அதிபருடன் தொடர்புவைத்து இதை மாற்றவேண்டுமென்று வற்புறுத்தினர். அவரதுவேண்டுகோளின்படி,புதிதாக இங்கு ஸ்தாபிக்கப்பட்ட சைவ ஆசிரியர் சங்கம், ஒரு உப குழுவை நியமித்து, அந்தத் திட்டத்தை ஆராய்வதாகத் தெரிகிறது. இதற்கு உதவியாக சைவபரிபாலன சபையின் அபிப்பிராயத்தையும் கோரியுள்ளனர்.

இப்புதிய திட்டத்தின் அம்சங்களாவன:-

1. வேதாந்தம் முதலியவை சேராமல், தனி சைவ சமய பாடத்திட்டமாக இருக்கும்.

2. சைவசமயப் பெரியார்களான ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர், சிவபாதசுந்தரம் போன்றவர்க

(8ம்- பக்கம் பார்க்க)

## இலங்கை வரவிருக்கும் பிரிட்டிஷ் நிபுணர்

கொழும்பு, ஞாயிறு

பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பூமிசாஸ்திர இலாவைச் சேர்ந்த டாக்டர் பி. எல். ஸி. ஜோன்ஸன், சமீபத்தில் இலங்கை வரவிருக்கிறார்.

தென் கிழக்காசிய பூமிசாஸ்திர வல்லுநர்களின் மாவட்ட மகா நாட்டில் பங்கு பற்றும் இவர், பின்னர் மலாய் பல்கலைக்கழகத்துக்கும் விஜயம் செய்வார்.

## இன்று

சுழிபுரம் குருபூசை மடத்தில் இன்று மாலை 6-30 மணிக்கு திரு. முருககிருபானந்தவாரியாரின் தம்பியார் திரு. மாமணைசிவம் 'வள்ளி திருமணம்' என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம் செய்வார்.

## விதைநெல் விநியோகம்

சென்னை, ஏப்ரல் 22

தமிழ் நாட்டில் நல்லரகநெல் விதைகளையும் புன்செய் தானிய விதைகளையும் உற்பத்தி செய்து விநியோகிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## தமிழரசுக்கட்சி கமிட்டி ஆராயும்

### பொருளாதார விருத்தி, ராசதுரைஎம்.பி.பற்றிபரிசீலனை

திருக்கோணமலை, ஞாயிறு

தமிழரசுக்கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் அடுத்த வாரம் இங்கு நடைபெறும் போது பல முச்கிய பிரச்னைகள்பற்றி ஆராரயவிருப்பதாகவும், மட்டக்களப்பு எம். பி. திரு. எஸ். இராசதுரையின் நிலைமைபற்றியும் விவாதிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

சுமார் ஒருவருட காலத்துக்குப்பின் முதல் தடவையாகக் கூடும் தமிழரசுக் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கமிட்டி அங்கத்தவர்களெல்லோரும் கலந்துகொள்ளவேண்டுமென்றுகாரி அவர்களுக்கு அழைப்புக்கள் அனுப்பபட்டுள்ளன.

ஒருவருடகாலத்தின் பின்நாட்டில் கட்சிக்குள்ள செல்வாக்கு என்னநிலையிலுள்ளது என்பது பற்றி கமிட்டி ஆராயுமென்றும் அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்பதுடன் விரைவில் அடுத்த நடவடிக்கையை ஆரம்பிக்கவேண்டுமா என்பது பற்றியும் கமிட்டி பரிசீலனை செய்யுமென்றும் கூறப்படுகிறது.

அடுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப் படுமுன் தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார விருத்திபற்றி அக்கறை செலுத்தி அதற்கான திட்டங்களை வகுக்கவேண்டுமென்று கமிட்டியில் வற்புறுத்தப்படுமென்று கூறப்படுகிறது.

## சிங்களத்தில் தேர்ச்சிபெருத அரசாங்க ஊழியர்

### அரசாங்கம் தண்டிக்க உரிமை உண்டா?

### 'இல்லை' என்கிறது சம்மேளனம்

கொழும்பு, ஞாயிறு

சிங்களத்தில் தேர்ச்சி பெருததற்காக அரசாங்க ஊழியரை தண்டிப்பதற்கு அரசாங்கத்துக்கு இப்பொது உரிமை இருக்கிறதா? அரசாங்கத்துக்கு இன்னும் அந்த உரிமை இல்லையென்று அரசாங்க சேவைதொழிலாளர் தொழிற் சங்கம் திறைசேரிக்கு தெரிவித்துள்ளது.

1963-ம் ஆண்டில் சிங்களத்தில் தேர்ச்சி பெறமுடியாதென்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்ட அரசாங்க ஊழியர்களின் விஷயத்தைத் தவிர ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி பெருததற்காக1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பின்னர் தான் தண்டிக்க அரசாங்கத்துக்கு உரிமை உண்டு என்று தொழிற்சங்கம் மேளனம் கருதுகிறது.

சிங்களத்தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்த அரசாங்க ஊழுயரின் சம்பழ உயர்வை திறைச்சேரி நிறுத்திவிட்டது. இந்த நடவடிக்கை திறைசேரியின் சுற்று நிருபங்களில் கொடுத்த வாக்குறுதிக்கும், ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கும் காலஞ்சென்னற பிரதமர் பண்டாரநாயக்காவுடனும் முன்னுள் நிதிமந்திரி திரு ஸ்டான்லி டிசொய்சாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் கொடுக்கப்பட்ட வபக்குறிதிகளுக்கும் முரணனது என்று தொழிற் சங்கம் மேளனம் தெரிவித்துள்ளது.

நிறுத்திவைக்கப்பட்டசம்பள உயர்வை மீண்டும் அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சம்மேளனம் கேட்டுள்ளதுடன் நிலைமையை விளக்க சம்மேளனத்தின் தூது கோஷ்டியொன்றுக்குப் பேட்டியளிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளது.

1956-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உத்தியோக மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது, 1956-ம் ஆண்டுக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள், சிங்களத்தில் தேர்ச்சி பெறமுடியாதவர்களாக இருந்ததால் 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மூன்றுமாத முன்னறிவிதலுடன் சேவையிலிருந்து ஒப்வு பெறலாமென்று சலுகை வழங்கப்பட்டது.

## மருந்துச்சாலை அதிகாரிகள்மீது மந்திரி நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க மருந்துச்சாலையிலுள்ள பெருந்தொகையான மருந்து வகைகள் விணைக்கப்படுகின்றன என்று பலர் முறையிட்டதன் பேரில், மருந்துச்சாலை அதிகாரிகள் ஒரு சிலர் மீது பிரதம மந்திரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசாங்க மருந்துச்சாலை நிர்வாகம், எதிர்பார்க்கப்படும் அளவுக்குத் திருப்தியாக வில்லை எனப் பிரதமர் சுகாதார மந்திரிக்குக் கூறியிருப்பதாகத் தெரிகிறது. சுகாதார இலாகாவின் மூலமாகவே மருந்துச்சாலை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## நேபாள மன்னர் - நேரு பேச்சுவார்த்தை முடிந்தது

புதுடில்லி, ஏப்ரல் 22

நேபாள-இந்திய உறவு சம்பந்தமாக நேபாள மன்னர் மகேந்திரரும் இந்தியப் பிரதமர் நேருவும் இங்கு நடத்தி வந்த பேச்சுவார்த்தைகள் இன்றுடன் முடிவடைந்தது. பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முடிவடைந்ததாகக் கூறப்படுகிறது,

மன்னர் மகேந்திரர் காட்மாண்டுக்குப் புறப்பட்டுச் சென்றபின் கூட்டறிக்கையொன்று நாளை வெளியிடப்படும்.

நேருவும் மன்னர் மகேந்திரரும் இன்று ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர். இரு நாட்டின் அதிகாரிகளும் இன்று காலை மீண்டும் 45 நிமிஷ நேரம் ஆலோசனை நடத்திய பின் நேரு-மன்னர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

### மன்னர் கருத்து

தனது இந்திய விஜயம் மகிழ்ச்சியளித்துள்ளதாக மன்னர் மகேந்திரர் இன்று நிருபர்களிடம் தெரிவித்தார். இந்திய—நேபாள உறவைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் சட்டத்துக்குட்பட்ட முறையில் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக நேரு உறுதியளித்துள்ளாரென்று மன்னர் மகேந்திரர் தெரிவித்தார். இந்திய எல்லைக்குள்ளிருந்து நேபாளத்தின் மீது பலாத்கார நடவடிக்கைகள் நடைபெறஅனுமதிக்கப்படமாட்டாதென்று நேரு உறுதியளித்ததாக அவர் சொன்னர்.

நேபாளத்துக்கு வெளியிலுள்ள நேபாளத்தவர் சிலர் தான் நேபாள-இந்திய உறவைச் சீர்குலைக்க முயற்சி செய்ததாக மன்னர் மகேந்திரர் கூறினர்.

## யாழ்ப்பாணத்தில் மே தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் இம்முறை மேதின விழா பல தொழிற் சங்கங்களும சேர்ந்து நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பொதுசேவாலீக், தொழிற் சங்க கூட்டு அமைப்பு ஆகியன லங்கா சமசமாஜக் கட்சித் தொழிற்சங்கஞடன் ஒன்று சேர்ந்து இம் முறை மேதினத்தைக் கொண்டாடுகின்றன. பஸ் தொழிலாழர் சங்கம், அரசாங்க தொழிற் சங்க மேளனம் சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம், மின்சார இலாகாதொழிலாளர் சங்கம், அரசாங்க கிருஷிக தொழிலாளர் சங்கம், சுங்க இலாகா சேவையாளர் சங்கம், லங்கா சமசமஜக் கட்சி வாலிப முன்னணிகள் மராமத்து இலாக தொழிலாளர் சங்கம், ஆகியவைகளைச் சேர்ந்தவர்களும் மற்றும் பலரும் மேதினத்தன்று பிற்பகல் 3 மணிக்கு சச்சேரியடியிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு நல்லூர் வீதி, காங்கேசன்துறை வீதிவழியாகச் சென்று முற்றவெளிதயை அடைவார். அங்கு பெபதுக் கூட்டம் நடைபெறும் இக் கூட்டத்தில் அரசியல் தலைவர்கள் சிலரும் சொற்பொழிவாற்றுவர்.

# 'திறந்தவெளி அரங்கில் வாரமிரு இசைவிருந்து'

## ரசிகரஞ்சன சபாவிழாவில் மாவட்ட நீதிபதி யோசனை

யாழ்ப்பாணம், திங்கள் "யாழ்ப்பாணம் முற்றவெளியில் நூல் நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளி அரங்கு பூர்த்தியடைந்ததும் அதில் வாரத்துக்கு இரண்டு தடவைகளாவது ஈழத்து வித்துவான்களின் இசைக் கச்சேரிகள் நடைபெறுவதற்குப் பயன்படுத்த வேண்டும். இதற்கு ரசிகர்களும் கலைஞர்களும் யாழ்ப்பாணம் ரசிகரஞ்சனசபா போன்ற ஸ்தாபனங்களும் முயற்சிசெய்ய வேண்டும்".

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. வி. தனபாலசிங்கம் பெருமாள் கோவில் முன்றலில் நடைபெற்றுவரும் ரசிகரஞ்சனசபாவின் 10, வது 11 வது ஆண்டு இசைவிழாவில் நான்காம் நாள்நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. வி. கோதண்டபாணி, திரு. என். சிதம்பரநாதன் ஆகியோரின் மேளக்கச்சேரியுடன் ஆரம்பமான சனிக்கிழமை நிகழ்ச்சிகளை கேட்டின்புறுவதற்குப் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர்.

மாவட்ட நீதிபதி திரு. வி. தனபாலசிங்கம் சிலகாலத்துக்குமுன் வாலிபர் காங்கிரஸிலிருந்து ஆற்றிய சேவையைக் குறிப்பிட்ட சபாத் தலைவர் திரு. து. சீனிவாசகம் தலைமையுரை நிகழ்த்துமாறு அவரைக் கேட்டுக்கொண்டார்.

"இசைக்கலை அறிவு எனக்கு குறைவு. ஆனல் இசையில் ஆர்வமுள்ளவன். எனவே ரசிகன் என்ற முறையில் இந்த விழாவில் கலந்துகொள்கிறேன்" என்று நீதிபதி திரு. தனபாலசிங்கம் தமது தலைமையுரையை ஆரம்பித்தார்.

"இன்னிசையால் கோபம் அடங்கும், அன்பு பெருகும், மனச்சாந்தி ஏற்படும்" என்று குறிப்பிட்ட நீதிபதி தனபாலசிங்கம், இராவணன் கைலயங்கிரியைப் பெயர்க்க முயன்று மலையின்கீழ் நசிபட்டபொழுது அவன் தனது ஒரு தலையையும் ஒரு கையையும் யாழாக்கி கானம் பொழிந்து கைலாசநாதனின் கருணையைப் பெற்றதாகவுள்ள கதையை எடுத்துக் கூறினர்.

இசையும் கலைகளும் முன்னேற வேண்டுமென்றல் இது போன்ற விழாக்கள் நடைபெற வேண்டியது அவசியமென்று நீதிபதி தெரிவித்தார்.

### திறந்தவெளி அரங்கில் கச்சேரி

"யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைக்கப்பட்டு வரும் திறந்த வெளிஅரங்கு விரைவில் பூர்த்தியாகிவிடுமென்று நம்புகிறேன். இந்த அரங்கை ஈழத்து இசைக் கலைஞர்களின் கச்சேரிகள் வாரத்துக்கு இரு தடவைகளாவது நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்ய முயற்சி செய்யவேண்டும். சினிமாத் தியேட்டர்களில் படம் தினசரி இரு காட்சிகள் நடைபெறுவது போல் இசைக் கச்சேரிகளை ஒழுங்கு செய்வது கஷ்டமாக இருக்குமாகதலால் வாரத்துக்கு இரண்டு தடவையாவது ஒழுங்கு செய்யலாம். மிகக் குறைந்த கட்டணம் வசூலித்து கச்சேரிகளுக்கான செலவைச் சமாளிக்கலாம்" என்று நீதிபதி தனபாலசிங்கம் யோசனைகூறினர். இந்த யோசனைக்கு ரசிகர்களும் கலைஞர்களும் ரசிக ரஞ்சனசபா போன்ற ஸ்தாபனங்களும் ஆதரவளிப்பார்களென்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நீதிபதியின் இந்த யோசனையை ரசிகரஞ்சனசபா நிர்வாக சபையில் தெரிவித்து திறந்தவெளி அரங்கை இசைக் கச்சேரிகளுக்குப் பயன் படுத்த முயற்சிசெய்வதாக சபாத் தலைவர் திரு. து. சீனிவாசகம் உறுதி கூறினர்.

## வல்லன் மாதர்சங்கக் கூட்டம்

### புதிய நிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை, ஞாயிறு புங்குடுதீவு – வல்லன் மாதர் முன்னேற்றச் சங்கத்தின் 9-வது வருடாந்தக் கூட்டம் வல்லன் கி. மு. சங்கக் காரியதரிசி திரு. க. ஐயாத்துரை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. திரு. சபாரெத்தினம் ஆயுர்வேத டாக்டர் திரு. கணேசு ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

பின் வருபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்கத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவி: திருமதி முத்தம்மா, காரியதரிசி: திருமதி செல்வி செ. சற்குணநாயகி, தனதிகாரி: திருமதி இ. பரமேஸ்வரி. பதினைந்து பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

மாதர் சங்கத்தாரால் நடாத்தப்பட்டு வரும் தையல் நிலையத்தை வளர்ச்சி பெறச் செய்வதற்குரிய பல விஷயங்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன. ஈற்றில் தையல் நிலைய வளர்ச்சிக்கு நிதி சேர்ப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## விவாகம்

சுதுமலை அம்பாள் ஆலயத்தில் 26-4-62 வியாழக்கிழமை காலை 9 மணிளவில் எனது மகள் சீதாலட்சுமிக்கு ஸ்ரீ மகேஸ்வர சர்மா திருமங்கலியதாரணஞ் செய்வார்.

சுற்றமித்திரர் சமுகந்தந்து ஆசிகூறுவாராக.

பொ. தியாகராச ஐயர்
அர்ச்சகர்
அம்மன் கோவில்
சுதுமலை.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணனந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


## வதிரி பஞ்ச் 'எ' கோஷ்டி வெற்றி

அல்வாய், ஞாயிறு யாழ்ட்டன் வெற்றிக்கேடயத்திற்காக வதிரி கரப்பந்தாட்டக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வரும் கரப்பந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறை ஸ்னடபர் கோஷ்டிக்வம் பஞ்ச் 'எ' கோஷ்டிக்குமிடையே வதிரி கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பஞ்ச் 'எ' கோஷ்டி 3-2 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. இப் போட்டியில் 20 கழகங்கள் பங்கு பற்றின.

மத்தியஸ்தராக ஆசிரியர் அரியரெத்தினம் கடமையாற்றினர் சென்ற ஆண்டும் பஞ்ச் 'எ' கோஷ்டியே சம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருதுஆண்டு சித்திரைத் திங்கள் 10-ம் திகதி திங்கட் கிழமை (23-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா மாதம் 17-ம் பிறை.

இன்று காலை 8-24 வரை திருதியை. பின்னர் சதுர்த்தி. பகல் 10-51 வரை அனுஷம். பின்னர் கேட்டை. சித்தயோகம். இராகுகாலம் 7-30 முதல் 9-00 மணிவரை.

இன்று திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் ஆகிய நட்சத்திரங்களுக்கு படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

அனுஷம்—கேட்டை: இன்று இவர்களுக்கு நண்பர்—உறவினர் உதவி, பணவரவு, சுபசிந்தனைகள், காலம் சந்தோஷமாகக் கழிதல் ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்முடிய) இன்று இவர்களுக்கு பணவரவு, தொழில் வெற்றி, நல்லோர்நட்பு, வாக்குவன்மை, வழக்குவெற்றி, சுகம் ஆகியன காணப்படுகின்றன.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு கடும்உழைப்பு, அசதி, சுகசெய்தி, பணவரவு, குடும்பசுகம், நண்பர் கொண்டாட்டம் ஆகியன காணப்படுகின்றன.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம், முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு பணவரவு, நல்லோர் உதவி, குடும்பத்தால் கஷ்டம், வைத்தியச் செலவு அதிகரிப்பு, ஏமாற்றம் ஆகியன காணப்படுகின்றன.

கடகம்:(புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய)இன்று இவர்களுக்கு குடும்ப கஷ்டம், பெண்களால் சச்சரவு, உண்டிவெறுப்பு, செய்கருமதடை, ஊழியர் கலகம் ஆகியன காணப்படுகின்றன.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய) இன்று இவர்களுக்கு பணவரவு, தொழிற்சிறப்பு, குடும்ப நிம்மதி, உறவினர் வரவு, செய்கருமவெற்றி ஆகியன காணப்படுகின்றன.

கன்னி: (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரைமுடிய) இன்று இவர்களுக்கு குடும்பகஷ்டம், இனத்தவரால் தொல்லைகள், பெண்கள் தொல்லை, நண்பர்பகை, ஆகியன காணப்படுகின்றன.

துலாம்: (சித்திரை பின்னரை, சோதி, விசாகம் முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு பணமுடை, நண்பர் உதவி, தொழிலில் கடும் உழைப்பு, பணவரவு, அலைச்சல் அசதி, சுகக்குறைவு ஆகியன காணப்படுகின்றன.

விருச்சிகம்: (விசாகம், 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இன்று இவர்களுக்கு உண்டி வெறுப்பு, நண்பர் உதவி, பணவரவு, தொழில் கடும்உழைப்பு, நற்செய்தி கேட்டல் ஆகியன காணப்படுகின்றன.

தனு: (மூலம், பூராடம்,உத்தராடம் 1ம்பாதம்முடிய) இன்று இவர்களுக்கு தொழிலூக்கம், முயற்சி வெற்றி, வாக்குவன்மை, கல்விச்சிறப்பு, தெய்வவழிபாடு, மதிப்புயர்ச்சி ஆகியன காணப்படுகின்றன.

மகரம்: (உத்தராடம் பின்முக்கால், திருவோணம்,அவிட்டம் முன்னரை முடிய) இன்று இவர்களுக்கு கடவுட்சிந்தனை, தருமச்செலவு, வாக்குவெற்றி, மதிப்புயர்ச்சி, பிதுருவழி கஷ்டம், குடும்ப நிம்மதியீனம் ஆகியன காணப்படுகின்றன.

கும்பம்:(அவிட்டம்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய) இன்று இவர்களுக்கு பிதுருவழிசிந்தனை, சுபசெய்தி, பணவரவு, வாக்குவன்மை, தாயாதிகள் கஷ்டம், வழக்குகணக்குகள் ஆகியன காணப்படுகின்றன.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி முடிய) இன்று இவர்களுக்கு உறவினரிடை விரோதம், நல்லோர் ஆதரவு, கடும்உழைப்பு, பணவரவு, நிதானம் ஆகியன காணப்படுகின்றன.

## ராணுவத்தினர் பற்றி புகார்

கொழும்பு, ஞாயிறு ஹினிதுமை தொகுதியில் எட்டு இராணுவத்தினர் நடந்து கொண்ட முறைபற்றி விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியை ஹினிதுமை எம். பி. திரு. ஹென்றி திஸ்ஸநாயக்கா கோரியுள்ளார்.

அப்பகுதியில் அமைக்கப்பட்டுவரும் ஒரு பாலத்தை மேற்பார்வை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ள ராணுவத்தினர் ஒரு வீட்டுக்குள் புகுந்து வீட்டிலிருந்தவர்களைத் தொந்தரவு செய்ததாகவும் கோயில் மதகுரு தலையிட்டதால் அவர்கள் அங்கிருந்து சென்றதாகவும் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளதாகவும் திரு. திஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார்.




# அமெரிக்க பிரசுராலயம்மீது முன்னாள் எகிப்து மன்னர் வழக்கு

## 'ஆனந்தமே தொழில்' நூலில் அவதூறு எனப் புகார்

நியூயார்க், ஏப். 22

முன்னாள் எகிப்து மன்னர் பரூக் எப்போதாவது அமெரிக்காவில் இருந்ததுண்டா வென்பதை விசாரித்து முடிவு செய்வது அவசியமாகுமென்று நியூயார்க் ராஜ்ய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்தது.

"ஆனந்தமே என் தொழில்" என்ற நூலின் பிரசுரகர்த்தா மீது மாஜி மன்னர் பரூக் கொணர்ந்துள்ள மானநஷ்ட வழக்கு சம்பந்தமாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் 4 லட்சம் டாலர் (ரு. 19 லட்சம்) நஷ்டஈடு கோரியிருக்கிறார்.

சமர்ப்பிக்கப்பட்ட பிரமாண வாக்குமூலங்களிலிருந்து வாதி அமெரிக்காவிலிருந்ததுண்டா என்ற விசாரணைக்குரிய பிரச்சினை எழுந்துள்ளதென்று நீதிபதி கூறியிருக்கிறார். 1952-ல் பிளாரிடாவில் மியாமி கடற்கரையிலுள்ள போர்டெல்லோவுக்கு மன்னர் பரூக் விஜயம் செய்ததாக அந்நூலில் ஒரு அத்தியாயம் பிரசுரிக்கப்பட்டதை அவதூறு என்று கூறியிருக்கிறார். மாஜி மன்னர் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள சாட்சிப்பத்திரங்களில் ஒன்று ராஜாங்க இலாகாவின் கடிதமாகும். 'விஸா' கோரி அவர் மனுப்போட்டதாகவோ அல்லது ராஜாங்க விருந்தினராக விஜயம் செய்ததாகவோ இலாகாவில் எவ்வித தஸ்தாவேஜியும் இல்லை என்று ராஜாங்க இலாகா கடிதம் கூறியுள்ளது. ஆனால், பிரசுரகர்த்தர்களான லைல்ஸ்டுவர்ட்டுகள் 3 தனி நபர்களின் பிரமாண வாக்குமூலங்களைத் தாக்கல் செய்துள்ளனர். அதில் மன்னர் பரூக் அல்லது அவர் ஜாடையுள்ள ஒருவரைச் சந்தித்ததாகவோ, அல்லது அவருடன் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதாகவோ கூறியுள்ளனர்.

# விமானம் நொறுங்கி மூவர் பலி

டுலூஸ், ஏப் 22

வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் படைகள் ரோந்துக்காகவும், சப்மரின் வேட்டைக்காகவும் உருவாக்கப்பட்ட 'அட்லாண்டிக்' இரட்டை என்ஜின் விமானம், அதன் சோதனைப் பிரயாணத்தின் போது விழுந்து நொறுங்கியது. இதனால் விமானிகள் மூவரும் கொல்லப் பட்டனர்.

'மாதிரிக்காக' தயாரிக்கப்பட்ட இந்த விமானம், தென் பிரான்சிலுள்ள டுலூஸிலிருந்து சோதனைப் பிரயாணத்தை மேற்கொண்டது. முதன்மாதிரி விமானம் அக்டோபர் மாதத்தில் பரீட்சிக்கப்பட்டதில் அது வெற்றிகரமான பிரயாணம் நடத்தியது,

---

# யு. எஸ். ஜெட் சோதனை

## ரஷ்யாவை மிஞ்சிவிட்டது

லாஸ்ஏஞ்சல்ஸ், ஏப் 22

அமெரிக்க சி. 135 ஸ்ட்ராடோ லிப்டர் ஜெட் விமானம், உயரம், வேகம் இரண்டிலும் முன்னால் சோவியத் யூனியன் அடைந்த சோதனையை மிஞ்சிவிட்டது.

முப்பது டன் எடை தூக்கக்கூடிய, வான்வெளி ஊர்திக் முதல் வெள்ளோட்டத்தில் 47171 அடி உயரம் எட்டியது. சோவியத் விமானம் 43,047 அடி உயரமே சென்றது. 20, 500 அடி உயரத்தில் மணிக்கு 618 மைல் வேகத்தில் பறந்தது. அதே உயரத்தில் சோவியத் யூனியன் விமானம் 600 மைல் வேகம் சென்றது.

---

# ஜெனரல் சலான்மீது சதிக்குற்றச்சாட்டு

## கொலைகளுக்கு தாம் காரணமில்லையாம்!

பாரிஸ், ஏப். 22

அல்ஜீரியாவில் சென்ற வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டு பாரிசுக்குக் கொண்டு வரப்பட்ட இரகசிய ராணுவ ஸ்தாபனத் தலைவர் ஜெனரல் சாலான் பாரிசில் ஒரு மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப் பட்டார்.

நாட்டின் ஆட்சிக்கு எதிராகச் சதிசெய்ததாக ஜெனரல் சலான்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரெஞ்சு அரசாங்கத்துக்கெதிராக அல்ஜீரியாவில் ஜெனரல்கள் நடத்திய கிளர்ச்சியில் ஜெனரல் கொண்டிருந்த பங்குபற்றியும் அதன் பின் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தை உருவாக்கி அவர் எடுத்த நடவடிக்கைகள்பற்றியும் விசாரணை செய்யப்படும்.

ஜெனரல் சலான் தமது சார்பில் வாதாடுவதற்கு நான்கு வழக்கறிஞர்களை ஏற்படுத்தியுள்ளார்.

அல்ஜீரியாவில் நடைபெறும் பலாத்கார சம்பவங்களுக்குத் தாம் பொறுப்பாளியல்லவென்றும் மாஜி ராணுவ கேணல்களே அவைகளைச் செய்து வருவதாகவும் ஜெனரல் சலான் கூறியதாகத் தெரிகிறது.

விசாரணையின் முடிவில் ஜெனரல் சலானுக்கு மரண தண்டனையே விதிக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

---

# அமெரிக்கா அணுஆயுத சோதனை நடத்தினால்....!

## சோவியத் யூனியன் எச்சரிக்கை

ஜெனிவா, ஏப். 22

அணு ஆயுதப் பரிசோதனையை இம்மாதக்கடைசியில் அமெரிக்கா ஆரம்பித்தால் படை குறைப்பு மகா நாட்டின் அணு ஆயுதத்தடை ஒப்பந்தத் துணைக்கமிட்டியிலிருந்து சோவியத் யூனியன் விலகிக் கொள்ளுமென்று சோவியத் பிரதிநிதி ஸோரின் நேற்று எச்சரித்தார்.

பிரிட்டனுக்குச் சொந்தமான கிறிஸ்மஸ்தீவில் அமெரிக்கா திட்டமிட்டுள்ள படி இம்மாதக்கடைசியில் பூமிக்கு மேல் அணு ஆயுத சோதனையை ஆரம்பித்தால் அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளிலிருந்து சோவியத் யூனியன் விலகிக் கொள்ளுமென்று நேற்று இங்கு பத்திரிகை நிருபர்களிடம் ஸோரின் தெரிவித்தார்.

அமெரிக்கா அணு ஆயுத சோதனையை ஆரம்பித்தால் 17 நாடுகளின் படை குறைப்பு மகாநாட்டிலிருந்து சோவியத் யூனியன் விலகிக் கொள்ளுமா? என்று கேட்டதற்கு ஸோரின் பதிலளிக்கவில்லை.

கட்டுப்பாடு, மேற்பார்வையில்லாத சோவியத் யூனியனின் படை குறைப்பு யோசனையை நேற்று மீண்டும் மேற்கு நாடுகள் நிராகரித்தன.

---

# 'ஆசியாமுழுவதிலும் உண்மையான ஜனநாயக நாடு இந்தியாவே'

### –ஸ்ரீமதி இந்திரா காந்தி

பர்மிங்ஹாம் (அலாபாமா) ஏப். 22

'ஆசியா முழுவதிலும் இந்தியா ஒன்றுதான் உண்மையான ஜனநாயக நாடு' என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று இங்கு கூறினார்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஒத்துழைப்பும் கூட்டுறவும் மிகவும் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை இந்தியாவின் சுயேச்சையான கொள்கை. ஒவ்வொரு பிரச்னையும் அதன் தகுதியைக்கொண்டு எங்களுடைய நாட்டின் நலனை மனதிற் கொண்டு வற்புறுத்தி வருகிறோம் என்று பர்மிங்ஹாம் கல்லூரியில் உரை நிகழ்த்துகையில் ஸ்ரீமதி இந்திரா காந்தி மேற்கூறியவாறு குறிப்பிட்டார்.

### கோவா பிரச்சினை

"இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கைக்குகோவாவில்எடுத்துக் கொண்ட ராணுவ நடவடிக்கை முரண்பட்டதல்லவா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஸ்ரீமதி இந்திரா காந்தி பின்வருமாறு பதில் கூறினார்:-

"14 வருடங்களாகப் போர்ச்சுக்கீசியர்களுடன் கோவாப் பிரச்சினையைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு இந்தியா முயன்று வந்திருக்கிறது. ஆனால், போர்ச்சுக்கீசியர் ஒத்துழைக்க மறுத்துவிட்டனர். ஆகவே அதிக் தீங்கு விளைவிக்காத நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது.

"அதிக தீங்கிழைக்கக்கூடியது எது?" என்று விளக்கம் கேட்டதற்கு ஸ்ரீமதி இந்திரா பின்வருமாறு பதில் கூறினார்:-

"கோவா மக்கள் மிகவும் பொறுமைசாலிகள். அவர்களே பொறுமை இழந்துவிட்டனர். கோவாவில் உள்ள எல்லா போர்ச்சுக்கீசியர்களையும் மக்களே கொலை செய்யக் கூடிய அபாயம் இருந்து வருகிறது."

ஸ்ரீமதி இந்திரா காந்தி மேலும் கூறினார்:-

"கோவாவில் நாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைக் கண்டனம் செய்கிறவர்கள், சீனாவுடன் போர் தொடுக்குமாறு எங்களை வற்புறுத்திக் கொண்டிருப்பவர்களே. அவர்கள் சாத்வீகத்தில் பிரியம் உள்ளவர்கள் அல்ல. உண்மையான காரணம் என்னவென்றால், அவர்கள் போர்ச்சுக்கீசியருக்கு வருத்தத்தை உண்டுபண்ண விரும்பவில்லை. கோவா எப்போதுமே இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்திருக்கிறது. கோவாவை போர்ச்சுக்கீசியர் அடக்கி ஆட்சி புரிந்து வந்திருப்பது ஒன்றுதான் அந்தப் பிரதேசத்திற்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள வித்தியாசம். ஸ்ரீமதி இந்திரா காந்தி தற்பொழுது அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து உரைகள் நிகழ்த்திவருகிறார்.

---

# கோவானியர் திரும்புகின்றனர்

லிஸ்பன் ஏப். 21

போர்ச்சுக்கலிலிருந்த கோவாமக்கள், பலர் போர்ச்சுக்கலிலிருந்து கோவாவுக்குப் பிரயாணமானார்கள். கோவா டாமன், டையூ ஆகிய பகுதிகளிலுள்ள போர்ச்சுக்கீசிய காவற் கைதிகளை ஏற்றிச் செல்வதற்காக போர்ச்சுக்கலிலிருந்து புறப்பட்ட கப்பல்களில் கோவா மக்கள் பிரயாணம் செய்கிறார்கள்.

# இலக்கிய உரை அரங்கம்

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்தின் இலக்கிய உரை அரங்கம் குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இன்று, பண்டிதர் வ. நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

உரை அரங்கத்தில் பலர் சொற்பொழிவாற்றினர்கள்.

---

# இந்தோனேஷியாவுக்கு சிங்கப்பூர் தொண்டர்கள்

ஜாகர்த்தா, ஏப்ரல் 20

மேற்கு இரியன் விடுதலையில் இந்தோனேஷியாவுக்கு உதவும் பொருட்டு சிங்கப்பூரிலிருந்து 100 தொண்டர்கள் இங்கு வந்துசேர்ந்தனர்.

# ரயில் கட்டணம் உயர்வுக்கு பலத்த கண்டனம்

## பணவீக்கத்தை அதிகரிக்கும் என மைசூர் பிரமுகர் கருத்து

சென்னை, ஏப். 22

'விலைவாசி உயர்வைத் தடுக்கவும், ஏற்றுமதியைப் பெருக்கவும் நாம் கவலை கொண்டிருக்கும் போது ரயில்வேயில் சாமான் கட்டணத்தை உயர்த்தியது விவேகமான நடவடிக்கையாகாது' என்று ஆந்திர வர்த்தக சபைத் தலைவர் திரு. எஸ். வெங்கடரங்கம் ஓர் அறிக்கையில் கூறினார்.

ஏற்றுமதிப் பொருட்களுக்கு 25 சத விகித கட்டண தள்ளுபடி தரவேண்டும் என்று ஏற்றுமதி இறக்குமதி கமிட்டி செய்த சிபாரிசை புதிய ரயில்வே மந்திரி அமுலாக்காதது வியப்பை அளிப்பதாக அவர் சொன்னார்.

செயல் திறமையை அதிகரிப்பதாலும், வாகனங்கள் போக்குவரத்தை அதிகரிப்பதாலும் நடைமுறைச் செலவைக் குறைப்பதாலும் மந்திரி உத்தேசிக்கும் உபரித் தொகையை எளிதில் பெறலாம் என்றும் அவர்.

ரயில்வே சாமான் கட்டண உயர்வால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும் என்றும், பண்டங்களின் விலை உயருமென்றும் மைசூர் வர்த்தக சபைத் தலைவர் திரு. சிவப்பா கூறினார்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வெற்றிக்கு அத்தியாவசியமான விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவதற்குப் பதிலாகப் பண வீக்கத்தை ஊக்குவிக்க அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளும் எடுப்பது விசித்திரமானதாகும் என்றும் ஏற்றுமதிப் பெருக்கத்துக்குக் கெடுதலாக கட்டண உயர்வு இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

கடும் இட நெருக்கடியைக் குறைப்பதுபோன்ற சாதாரண வசதியைக் கூட செய்யாமல் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளின் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று திரு. சிவப்பா சொன்னார்.

# குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க அனுமதி

## கிஸங்கா கோருகிறார்

லியப்போல்ட்வில்லி, ஏப். 22

காங்கோ மத்திய அரசாங்கத்தினால் தற்பொழுது காவலில் வைக்கப்பட்டுள்ள காங்கோவின் முன்னாள் உதவிப் பிரதமமந்திரி திரு. கிஸங்கா, தம்மீது காங்கோ மத்திய அரசாங்கத்தினர் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு பார்லிமெண்டில் தாம் பதிலளிப்பதற்கு தமக்குச் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளார்.

காங்கோவுக்கருகிலுள்ள ஒரு தீவில் காவலில் வைக்கப்பட்டுள்ள திரு. கிஸங்கா பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிவினை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி திரு. கிஸங்கா சென்ற ஜனவரி மாதத்தில் காவலில் வைக்கப்பட்டார்.

தாம் சட்டவிரோதமாகக் கைதுசெய்யப்பட்டதாகவும் இன்னமும் தாம் பார்லிமெண்ட் அங்கத்தவரென்றும் தெரிவித்த திரு. கிஸங்கா தம்மீது மத்திய அரசாங்க அங்கத்தவர்கள் பலர் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்குத் தாம் பதிலளிக்க முடியுமென்று தெரிவித்தார்.

தமது டாக்டர் கூடக் கைதுசெய்யப்பட்டுவிட்டதாகத் தெரிவித்த திரு. கிஸங்கா தாம் முகக்ஷவரம் செய்து கொள்வதற்குக்கூட காவற்காரர்கள் அனுமதிக்கிறார்களில்லையென்று கூறினார். தமது குடும்பத்தினர் லியப்போல்ட்வில்லியில் எதுவித வருவாயுமின்றிக் கஷ்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

---

# ஏரியில் ஜீப் மூழ்கியது

## மூவர் மரணம்

போபால், ஏப் 22

ஜீப் ஒன்று 30 அடி ஆழமுள்ள ஏரியில் இறங்கியதின் விளைவாக ஜீப்பிலிருந்த மூன்று நபர்கள் நீரில் மூழ்கினர்.

இறந்தவர்களில் ஒருவரின் சடலம் மட்டும் கண்டுபிடிக்கப் பட்டது.

இவ்விபத்து, வளைவுஒன்றில் ஜீப் திரும்பும்போது நிகழ்ந்தது.

---

# ருவண்டா-உருண்டி சுதந்திரம்

பிரஸல்ஸ், ஏப்ரல் 20

ருவண்டாவும் உருண்டியும் வருகிற ஜூலை மாதம் முதல் திகதி சுதந்திரம் அடையுமென அறிவிக்கப்படுகிறது.

---

# மால்டாவில் 80 பேர் கைது

கல்கத்தா, ஏப் 21

மேற்கு வங்காளத்தில மால்டா என்ற இடத்தில் சமீபத்தில் இருபிரிவினருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பு சம்பந்தமாக இதுவரை 80 பேர் கைது செய்யப்பட்டனர். இப்போது அப்பகுதியில் அமைதி நிலவுகிறது.

### மணி வாக்கு

"நல்ல கூரை போடப்பட்ட வீட்டுக்குள், மழை எப்படி ஒழுகாதோ, அதே போல், நல்ல பக்குவப்பட்ட மனதுக்குள் ஆசை முதலிய வெறிகள் நுழையா"

—தம்மபதம்.

ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 10 மீ உ (23-4-62)

## நல்ல சூழ்நிலை

மலாயாவிலிருந்து திரும்பிய கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத், இலங்கை முன்னேற்றமடையாதிருப்பதற்கான உண்மை காரணத்தைப் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தயக்கமின்றி எடுத்து விளக்கியதற்காக அவரைப் பாராட்டவேண்டும்.

நமக்குப் பின் சுதந்திரமடைந்த மலாயா பல விதங்களிலும் முன்னேறிவருகையில், இலங்கை முன்னேற்றமடையாததற்கு, பெரும்பான்மை சமூக வகுப்புவாதமும், முக்கிய விஷயங்களை புறக்கணித்து, மொழி, மதம், கலாச்சாரம் போன்றவைகளுக்கு முதலிடம் அளித்துவருவதும்தான் முக்கிய காரணம் என்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். இக்காரணங்களை இதற்கிடையே பலர் எடுத்துச் சொல்லியிருப்பினும் மந்திரி சபையைச் சேர்ந்த ஒருவரே பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருப்பது இதுவே முதல் தடவை.

முக்கிய மந்திரிகளுள் ஒருவரான அவர், தமது இக்கருத்தை மற்ற மந்திரி சகாக்களுக்கும் எடுத்து விளக்கி, மொழி, முதலிய விஷயங்களில் இனி தாராள மனப்பான்மை காட்டும்படி அவர்களது மனதை மாற்றக்கூடுமாயின், இலங்கை அரசியல் நல்லதோர் திருப்பம் பெற்று முன்னேற வழி பிறக்கும். எப்படியும் ஒரு மந்திரியே, பெரும்பான்மை சமூக வகுப்புவாதத்தையும், மொழி வெறியையும் கண்டித்திருப்பது, வரவேற்கத்தக்க நல்லதோர் அறிகுறியாகும்.

யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி பொதுக் கூட்டத்தில் நல்லூர் பிரதிநிதி டாக்டர் நாகநாதன், மற்ற தமிழ்த் தலைவர்களின் ஒத்துழைப்பை வேண்டினர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், திரு. வி. சுந்தரலிங்கமும், இம்முக்கியமான சமயத்தில் முன்வந்து ஒத்துழைத்து உதவ வேண்டுமென்றார். பழைய வேற்றுமைகளையெல்லாம் தலைவர்கள் மறந்து, ஒற்றுமையாக முயற்சிசெய்யவேண்டிய அவசியம் வந்துவிட்ட டாக்டரின் வேண்டுகோளும் வரவேற்கத்தக்க நல்லதோர் அறிகுறியாகும்.

தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த மற்றொரு தலைவரான திரு. எஸ். கதிரவேற்பிள்ளை மன்னரிலே ஒரு பொதுக்கூட்டத்தில் "சிங்களவர் நல்ல மக்கள். அவர்களது மனதை மாற்றக்கூடிய வழியில் தமிழர் நடந்து கொள்ள வேண்டும். அதுவே சத்தியாக்கிரகத்தின் அடிப்படைக் கொள்கையாகும்" என்று பேசியதாக ஒரு செய்தி கூறுகின்றது. இவற்றையெல்லாம் கவனிக்கையில் சமரசத்துக்கான நல்ல சூழ்நிலை உருவாகி வருவதாகவே தோன்றுகிறது.

சென்ற சில வருட சம்பவங்களால், இலங்கையின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதையும், இந்நிலை மாறி நாட்டில் சமூக சமரசம் ஏற்படவேண்டுமென்பதையும் தேசாபிமானிகள் கவலையுடன் உணர்ந்து வருகின்றன இப்போது சமரசத்துக்கான நல்ல சூழ்நிலை உருவாகி வருவதால், இன்றைய சிக்கல்களையெல்லாம் பேச்சுவார்த்தைகள் மூலம் நல்லபடியாகத் தீர்த்து வைக்க அவர்கள் இச்சமயம் முன்வர வேண்டும். பொது மக்கள் சமரச சமாதானத்தையே விரும்புவதால், இச்சமயம் சமரசத்துக்காகச் செய்யும் நன்முயற்சிகள் வீண்போகாதென்றும் நற்பயன் அளிக்குமென்றும் நம்புகிறோம்.

# புதிய சமுதாயத்தில் ஆசிரியர்கள்

## தேசிய வாழ்வினின்று ஒதுங்கி நிற்கவேண்டுமா?

— டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி —

[இந்திய மத்திய கல்வி அமைச்சர்]

நாட்டின் தேவைகளை அடுத்து கல்வியைத் தேசியமயமாக்கும்பொழுது ஆசிரியர்கள்தாம் ஆக்கவேலை செய்யும் தலைவர்களாக இருக்கத் தேவைப்படுவார்கள். அவர்கள் எப்பொழுதும் கல்வித் திட்டத்தில் ஒரு மத்திய பதவியை வகுத்துக்கொண்டனர். ஆனால் மாறுதல் காலங்களிலே அவர்களுடைய முக்கியத்துவம் இன்னும் கூடுகிறது. நாடு பொருளாதாரத்திலும், வளத்திலும் முன்னேறுவதற்கு, நன்குக அமைக்கப்பட்ட உங்களது உத்தியோகம் போன்றதோர் உத்தியோகம் கல்வித் திட்டத்தை தேசியமயமாக்குவதில் என்ன வழிவகைகளைக் கையாளலாம் என இந்த மகாநாட்டில் நீங்கள் ஆராயவேண்டுமென நான் விரும்புகிறேன்.

நம் சமுதாயம் மாறுபட்டுக்கொண்டிருக்கும் இந்த வேளையில் ஆசிரியர்கள் பெரும் பொறுப்பை ஏற்கவேண்டியவர்களாகின்றனர். சமுதாயத்தில் ஏற்படும் மாறுதல்களிலே எழும் முக்கியமான கேள்விகளையிட்டு ஆசிரியர்கள் செய்யும் தீர்மானங்களைப் பொறுத்துத்தான் உள்ளது இந்தியாவில் ஆசிரியத் தொழிலின் எதிர்காலம். அவர்கள் தேசிய வாழ்வினின்று ஒதுங்கி நிற்கவேண்டுமா அல்லது சமுதாயத்தைத் திருத்தியமைப்பதில் ஊக்கமாகப் பங்குகொள்ள வேண்டுமா? கலாச்சாரத்தைப் பரப்புவதுமட்டும்தான் அவர்களுக்குத் தொழிலா அல்லது சமுதாயத்தில் மாறுதல்களை உண்டாக்குவதிலும் அவர்களுக்கு முக்கியபொறுப்புண்டா?

### கலாச்சாரத் தலைவர்கள்

சாதாரண காலங்களிலே சமுதாயம் அசைவின்றியிருக்கும்பொழுது ஆசிரியர்களின் முக்கிய தொழில் கலாச்சாரத்தைப் பரப்புவதுதான். ஆனால் இன்று நாம் சென்றுகொண்டிருக்கும் காலத்தைப் போன்று மாறுதல்கள் நிகழுங் காலங்களிலே அவர்கள் தாங்கள் சீவிக்கும் கலாச்சாரச் சூழல்களிலிருந்து வெளியே வந்து, மாறுதல்களை நன்குக உணர்ந்து அதிலுள்ள முக்கிய அம்சங்களைப் புதிய தலைமுறைக்கு விளங்க வைக்கவேண்டும். எதிராய்வரும் தலைமுறையை இந்த மாறுதல் காலங்களில் ஆசிரியர்கள் கவனமாக வழி நடத்திச் சென்றால்தான் அவர்கள் பத்தியிலும், பண்பாட்டிலும் உயர்ந்த படியை அடைவார்கள்.

ஆகையால் இவ்வேலையைச் செய்யும் திறனை எல்லா ஆசிரியர்களும் அடையவேண்டும். இந்நிலையை அடைய சமுதாயச் சிக்கல்களைப்பற்றி நீண்டகாலம் படிக்கவேண்டும். அத்தோடு கடுமையான வேலையும் செய்ய வேண்டும். நாம் கட்டியெழுப்ப இருக்கும் சமுதாயத்தைப்பற்றி அவர்கள் நன்குக அறிந்தால்தான் வரும் தலைமுறையும் அதை நன்கு விளங்கி அதில் எழும் சிக்கல்களைத் தீர்க்க ஆயத்தமாக இருக்கும். ஆசிரியர்கள் படிப்பாலும், விளக்கத்தாலும் இந்த நாட்டிலே மக்களுக்குத் தேசிய அரசியல் சுதந்திரத்தையும், பொருளாதாரத்துறை, சமுதாயத்துறை, அறிவுத்துறை முதலியவைகளில் சுதந்திரத்தையும் அளிக்கக்கூடியதோர் சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் திறனுடையவர்கள் நாங்கள் என்று எங்களில் அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். நம் சரித்திரத்தின் முக்கிய கட்டமாகிய இந்த நேரத்திலே விஷய அறிவு குறைந்தவர்களும், ஊக்கமற்றவர்களுமான ஆசிரியர்கள் சமுதாயச் சிக்கல்களை விளங்கவும்மாட்டார்கள்; புதுச் சமுதாயத்தில் நம்பிக்கை கொள்ளவும் மாட்டார்கள். அவர்கள் இளைஞர்களுக்குக் கல்வி புகட்டவோ, அவர்களை ஊக்குவிக்கவோ, கட்டுப்பாட்டில் பழக்கவோ தகுதியற்றவர்கள்.

### ஆசிரிய சங்கங்கள்

இளைஞர்களுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உண்டு பண்ணுவதற்கு முதலிலே ஆசிரியர்கள் புது எண்ணங்களையும், புத்துணர்வையும் உடையவர்களாக இருக்க வேண்டும். இந்தப் புது எண்ணங்களையும், புத்துணர்வையும் அவர்களுக்கு ஆசிரிய சங்கங்கள்தாம் கொடுக்க வேண்டும். ஆசிரியர்களின் ஒன்று சேர்ந்த முயற்சியினால் அவர்கள் சமுதாயத்தைத் திருத்தியமைக்கும் பணியில் தங்களுக்கு உரிய இடத்தை எடுக்கத் தக்கவர்களாகிறார்கள்.

### ஆசிரிய சங்கங்கள் கடமை

ஒரு காலத்திலே எல்லா வகுப்பு மக்களாலும் உயர்ந்த படியில் வைத்துக் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்று அவர்கள் நிலையையும், செல்வாக்கையும் இழந்து நிற்பது நமது சமுதாயத்தின் துயர் நிலையாகும். ஆசிரியர்கள் மீண்டும் சமூகத்தில் தங்கள் நிலையை அடைந்து சமூகப் பொருளாதாரக் கொள்கைகளில் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கத் தக்கதாக வருவதற்கு இந்த அகில இந்திய ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களின் சங்கம் ஆசிரியர்களுக்கு உதவி செய்யவேண்டும். இந்நிலையை பலாத்காரத்தாலோ அல்லது சலுகைகள் மூலமோ பெறமுடியாது. பொது மக்களின் அபிப்பிராயத்தை உயர்த்துவதாலும், அவர்களது மானசீகத் தயவைப் பெறுவதாலுமே அடையலாம். ஆசிரிய சங்கங்கள் வலுப்பெற்றாலன்றி இந்த நிலையை அடைய முடியாது. நம் நாட்டிலே அநேக சங்கங்கள் ஆண்டு தோறும் கூடி கல்வி கற்பிக்கும் முறை, சம்பளத் திட்டம், வேலை செய்யும் வசதிகள் முதலியவைகளைப்பற்றிச்சில தீர்மானங்களை நிறைவேற்றுகிறோமேயன்றி பெரும்படியான கல்வித் திட்டங்களைப் பற்றியோ, கல்வித் திட்டங்களைத் தீர்மானித்து உருவாக்கும் அரசாங்கப் பொருளாதாரக் கேள்விகளைப்பற்றியோ சிந்திப்பதில்லை. ஆசிரியர் சங்கம்போன்ற ஓர் உத்தியோக பூர்வமான சங்கம் ஆசிரியத் தொழிலுள்ள சிக்கல்களை ஆராயவேண்டியதுதான். ஆனால் ஆசிரியர்கள் இன்னும் கட்டுப்பாடான முறையில் தங்கள் ஒன்று சேர்ந்த வலுவைக் கல்வித் திட்டங்களையும் அரசாங்கத் திட்டங்களையும்உருவாக்கும் வேலையில் பிரயோசனப்படுத்தப்படாவிட்டால்அவைகள் பிரயோசனமற்ற சங்கங்களாகத்தான் இருக்கும். தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் தொழிலாளர் சங்கங்கள், வங்கிச் சங்கங்கள் முதலியன ஆசிரிய சங்கங்களைவிட நல்ல கட்டுப்பாடான முறையில் இயங்கி தங்களை நல்லமுறையில் பாதுகாத்துக்கொள்கின்றன ஜனநாயகச் சமுதாயத்திலே நல்ல கட்டுப்பாடான இயக்கங்களில் சேர்ந்து கூட்டுமுறையில் திட்டங்களை மாற்றவோ அமைக்கவோ கூடியவர்கள, அதிகாரத்திற்கும், மரியாதைக்கும் உரியவராகிறார்கள். இன்று நம் சமுதாயத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமுதாய, பொருளாதாரப் புரட்சிகளைப் பற்றி அநேக ஆசிரியர்கள் அறியமாட்டார்கள். சிலர் அதில் அக்கறைகொள்வதில்லை.

ஒரு ஜனநாயக சமுதாயத்திலே எப்படிப் பல சங்கங்கள் தொழிற்பட்டு அரசாங்கத் திட்டங்களைப் பாதிக்கின்றன என்பதை நன்கறிய ஆசிரியர்களுக்குத் தேவையான பொருளாதார அரசாங்கக் கல்வியை அளிக்கவேண்டியது ஆசிரிய சங்கத்தைப்போன்ற ஓர் உத்தியோகபூர்வமான சங்கத்தின் கடமையாகும்.

### ஆரம்பக்கல்வி

ஆசிரிய சங்கங்களின் அடிப்படைக்கடமை ஆசிரியர்களுக்குத் தகுந்த சம்பளங்களையும் வேலைசெய்யும் வசதிகளையும் பெறுவதுதான். ஆனால் இந்தக்கேள்விகள் கல்வியைச் சீர்திருத்தும் முயற்சியோடு இணைக்கப்பட்டால் ஆசிரியர்கள் மக்களது அனுதாபத்தையும், உதவியையும் பெறுவர் அகில உலகக் கல்வி அவசியமென்று மக்களை உணரவைப்பதையும் அதை விருத்திசெய்ய அவர்களிடை ஒரு பெருவிருப்பத்தை உண்டுபண்ணுவதையும் தங்கள் வேலையாக ஆரம்ப வகுப்பாசிரிய சங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆரம்ப வகுப்புக் கல்வி கட்டாயமென்பதையும், இலவசமென்பதையும் நடைமுறையில் கொண்டுவராவிட்டால் ஜனநாயகம் மெய்யாகமாட்டாது. மேல்வகுப்பினரும், மத்திய வகுப்பினரும் சலுகைகளையும், அதிகாரங்களையும் தாங்கள் வைத்துக்கொள்வதற்காகக் கல்வியால் வரும் சலுகைகளைத் தாங்களே வைத்துக்கொண்டார்களேயன்றி பொதுமக்களுக்குக் கல்விபுகட்டுவதில் ஊக்கங்காட்டவில்லை. பணவசதியுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தனிப்பட்ட பாடசாலைகளில் புகட்டுவதால் அவர்கள் பயிற்றப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுத் தலைவர்களாகிறார்கள். அதே நேரத்தில் ஏழைகளின் குழந்தைகள் பள்ளிக்கூடங்களின்றித் தவிக்கின்றனர் அல்லது சரியான ஆசிரியர்களில்லாத ஆரம்பப்பாடசாலைகளோடு திருப்தியடைகின்றனர். கல்வித்திட்டத்தில் இந்த வித்தியாசம் இருக்கும் வரை நம் ஜனநாயக லட்சியம் வெறும் வாய்ப்பேச்சாகத்தானிருக்கும். ஆகையால் நம் சட்டத்தில் கூறியுள்ளபடி 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குக் கட்டாயக்கல்வியும், இலவசக்கல்வியும் கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கேட்கும் ஓர் இயக்கத்தை நீங்கள் தொடங்கவேண்டுமென ஆரம்ப வகுப்பாசிரியர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கல்வி முறை விரியவிரிய கூடிய ஆசிரியர்கள் தேவைப்படுவர். அத்தியாவசியமான தேசிய

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கானா ஜனாதிபதி குருமா அவர்களுக்கு!

சபாஷ்! பல வருடகாலம் உங்களது கைத்தொழில் மந்திரியாக இருந்த தங்கள் உற்ற நண்பர் எடுஸியை, ஒரே நாளில் வேலையைவிட்டு டிஸ்மிஸ் செய்ததுடன், அவரது புதிய மாளிகையையும் தட்டுமுட்டு சாமான் எல்லாவற்றையும் பறிமுதல் செய்துவிட்டீர்கள்!

எடுஸியின் மனைவி ரூ. 45 ஆயிரம் மதிப்புள்ள தங்கக் கட்டிலை வாங்கியதாக லண்டன் பத்திரிகைகள் அம்பலப்படுத்திவிட்டன. எடுஸி சமீபத்தில் 19 லட்ச ரூபாய் செலவில் ஒரு பெரிய அரண்மனையைக் கட்டியிருந்ததும் வெளியாயிற்று. இவ்வளவு பணமும் அவருக்கு எப்படிக் கிடைத்தது? இதைப்பற்றி உடன் அவசர விசாரணை நடத்தி, தங்கள் நண்பரை மந்திரி வேலையிலிருந்து நீக்கியதுடன், அவரது புதிய மாளிகையையும், அங்கிருந்த நவீன சாமான்களையும் பறிமுதல் செய்துவிட்டீர்கள். தயவுதாட்சண்யமின்றி தங்கள் கட்சிக்காரர்மீது இவ்வித நடவடிக்கை எடுத்து லஞ்சப் பேயின் தலையில் குண்டாந்தடியால் அடித்ததற்காகத் தங்களைப் பாராட்டுகிறேன்.

எங்கள் இலங்கையிலும் லஞ்சம் வாங்கி டம்பாச்சாரி வாழ்க்கை நடத்தும் பலர் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை அம்பலப்படுத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பவர்கள் தான் இல்லை. தாங்கள் எடுத்த நடவடிக்கை, இங்கு நல்ல முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்பது என் பிரார்த்தனை. தாங்கள் ஒருமுறை எங்கள் இலங்கைக்கு தயவு செய்து விஜயம்செய்ய வேண்டுகிறேன்.

* * *

நேற்று அதிகாலை திடீரென கிளிநொச்சிக்கு நண்பருடன் வெளிக்கிட்டேன். அங்கு செல்வது இதுவே முதல் தடவை. எஸ். எஸ். ஸி. படித்த தமிழ் வாலிபர்கள் நடத்தும் பண்ணைக்குப் போனோம். சிரித்த முகத்துடன் சில வாலிபர்கள் எங்களை வரவேற்றனர். தாங்கள் நடத்தும் கோழிப் பண்ணையையும், காய்கறித் தோட்டங்களையும் பெருமையுடன் சுற்றிக் காட்டினர். "தூரத்தில் அதோ மாடு கட்டி உழுகிறாரே அவர்தான் எங்கள் குழுத் தலைவர் மார்க்கண்டு" என்று அறிமுகம் செய்துவைத்தார் வாலிபர். அவரிடம் சென்று கதைத்தோம். நான்கு வருடங்களுக்கு முன் காடாகக் கிடந்த இடமாம் அது. இப்போது வாழை, புகையிலை, வெங்காயம், காய்கறித் தோட்டமாக மிளர்கிறது. ஒருவர் அங்கு குதிரைமீது குஷியாக சவாரி செய்துகொண்டு போனார். மற்றொருவர் தோட்டத்திலிருந்து பிஞ்சு கத்தரிக்காயையும், வெண்டைக்காயையும் பறித்துக் கொண்டுபோய், சமைத்தார்! ஒவ்வொருவரும் சுமார் ரூ.4000 செலவில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சுதந்திரமான வாழ்வு. யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 150 படித்த வாலிபர்கள் அங்கு குடியேறி, சுதந்திரமாக, சந்தோஷமாக,வாழ்க்கை நடத்துகிறார்கள்முடிந்தால் நீங்கள் அவசியம் நேரில் அங்கு போய்ப் பாருங்கள், உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்று திருவள்ளுவர் கூறிய தன் உண்மையை உணர்வீர்கள். நமது படித்த வாலிபர்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடம் அது.

* * *

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்—தொழுதுண்டு பின் செல்பவர்"

—திருவள்ளுவர்.

யாழ்ப்பாணம்

# மாநகரசபையை உடனடியாகக் க.லைக்கவேண்டும்

## சமஷ்டிக்கட்சி சத்தியாக்கிரக இயக்கம் தோல்வியே!

### நல்லூர் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் முன்னாள் மேயர் சி. பொன்னம்பலம் உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழ்மாணவர்கள் பௌத்த பாஞ்சாலையில் சிங்களம் கற்கின்றனர். மற்றும் அநேகர் சிங்களம் கற்கிறார்கள். தமிழ் அரசாங்க ஊழியர்களும் பதவி உயர்வுக்காகச் சிங்களம் படிக்கின்றனர். சமஷ்டிக் கட்சியும் மற்றைய அரசியல் தலைவர்களும் தமிழர் சிங்களம் படிக்கக் கூடாதென்று பகிரங்க மேடைகளில் கூக்குரலிடுவதனால் என்ன பயன்? பார்லிமெண்ட் ஸ்தானத்தைக் கைப்பற்றவே இவ்வாறு செய்கின்றனர்".

இவ்வாறு யாழ்ப்பாண முன்னாள் மேயரான திரு. சி. பொன்னம்பலம நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 13-வது வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இச் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு பெருந்திரளானோர் வந்திருந்தனர்.

திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதாவது:-

தமிழர் சிங்களத்தை இரண்டாவது பாஷையாகவும் சிங்களவர் தமிழை இரண்டாவது பாஷையாகவும் கற்க வேண்டுமெனக் கடந்த 20 வருடகாலமாக நான் வற்புறுத்தி வந்திருக்கிறேன். இப்பொழுது சிங்களவர் தமிழை படிக்கவேண்டியதில்லையென்று விட்டுவிடுகிறார்கள். தமிழருக்கு இலங்கையைவிட வேறு தாயகம் இல்லாத படியால் அவர்கள் சிங்களவருடன் இந்நாட்டில் வாழவேண்டியுள்ளது. ஆகையால் அவர்கள் அபிலாஷையில் சிங்களம் படிக்கவேண்டியுள்ளது.

அகிம்சையைக் கடைப்பிடிப்பதன்மூலம் தமது இலக்கை அடைந்துவிடலாமென சமஷ்டிக் கட்சி கோருகிறது. சத்தியாக்கிரக இயக்கம் வெற்றியளித்திருப்பதாகச் சமஷ்டிக் கட்சி தம்பட்டம் அடிக்கிறது. ஆனால் இந்த இயக்கம் படுதோல்வியேயாகும். தலைவர்கள் கைது செய்யப்பட்ட போது சத்தியாக்கிரகிகளை இராணுவத்தினர் தாக்கினர். எல்லோரும் பயத்தினால் ஓடினர். இது அகிம்சையா? அங்கிருந்து தாக்குதல்களைப் பெற்றிருக்கவேண்டும். இறந்துமிருக்கலாம். பத்து அல்லது பதினையாயிரம் தமிழர் இறந்தும் ஐம்பது அறுபதினாயிரம் தமிழர் சிறைக்கும் சென்றிருந்தால் உலக அபிப்பிராயம் ஏற்படுத்தப்பட்டு தமிழ்ப் பாஷைக்குரிய அந்தஸ்தும் கிடைத்திருக்க வசதியேற்பட்டிருக்கும். தமிழை அரசாங்க மொழியாக பிரகடனப்படுத்தாத வரை சிங்களவர் தமிழருக்கு அநீதியே இழைக்கின்றனர்.

**மாநகர சபை**

யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகம் படுமோசமானதாக இருக்கிறது. மாநகர சபை மேலதிக ஊழியர்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள ஊழியர்களில் கால்பங்குபேரைக் கொண்டு திறமையான நிர்வாகத்தை நடத்தமுடியும். ஸ்தலஸ்தாபனங்கள் வேலையற்றவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக இருக்கவில்லை. அது மத்திய அரசாங்கத்தின் வேலையாகும்.

நகரத்தின் சுகாதாரம் நல்ல நிலைமையில் இல்லை. வீதிகள் பழுதடைந்திருக்கின்றன.

அங்கத்தவர்கள் பொறுப்பற்றமுறையில் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள். இந்த மாநகர சபையைக் கலைத்து ஒரு சிவில் சேவையாளரை விசேஷ கமிஷனராகக் கொண்டு நிர்வாகத்தை நடாத்தவேண்டுமென நான் அபிப்பிராயப்படுகிறேன். கமிஷனரையே விசேஷ கமிஷனராக நியமித்தால் அரசியல் தலையீடு தலையெடுக்கும்.

திருவாளர்கள் ஏ. விஸ்வநாதன், பீட்டர். எஸ். சோமசுந்தரம், வி. சி. பரமானந்தம் ஆகியோரும் செல்வி இராசமணி கந்தையா, செல்வி தையல்நாயகி சின்னையா ஆகியோரும் பேசினர். நாடகமும் நடைபெற்றது.

---

## சர்வகலாசாலைப் பெண்கள் அமெரிக்க சங்கம்

### 31 நாடுகளுக்கு கல்வி உபகாரச் சம்பளம்

வாஷிங்டன், ஞாயிறு

இலங்கை, இந்தியா, இஸ்ரவேல், பாகிஸ்தான் உட்பட் 31 நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கு சர்வகலாசாலைப்பெண்கள் அமெரிக்க சங்கம் உயர்தரப்படிப்புக்கும் ஆராச்சிகளும் உபகாரச் சம்பளம் வழங்கியுள்ளது.

இந்த உபகாரச்சம்பளத்தை பெறும்தகுதியை 58 பேர் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் 1962- 1963-ம் ஆண்டுகளுக்கான சீவனப் பணமாகவும் உடன் செலவுப் பணமாகவும் 2500 சிலிங் பெறுவர். இத்துடன் இச் சங்கம் பிரத்தியோகக் கல்விப் பணமும் வளங்கும். இவர்களில் 30 பேர் ஐக்கிய அமெரிக்காவில் கல்வி பயில்வர்.

இலங்கையிலிருந்து கே. எச். டி. டி' சில்வா இந்த உபகாரச்சம்பளத்தைப் பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் குடும்பத்தொடர்பு குழந்தைகள் அபிவிருத்தி சம்பந்தமாக பயிற்சி பெறுவார்.

---

## கிராமங்கள் நாட்டின் ஜீவன்போன்றது

### பரிசளிப்புவிழாவில் காரியாதிகாரி பேச்சு

தெல்லிப்பழை, ஞாயிறு

"மொழி, சமயம், கலை, கலாச்சாரம் என்பனவற்றை வளர்க்கக்கூடியன சன சமூக நிலையங்களே. அவை செய்யும் பணிகளினாலே தான் சமூகம் வளர்ச்சி பெறுதல் முடியும். கிராமங்கள் ஒரு நாட்டின் ஜீவன் போன்றது."

இவ்வாறு மாவை கொல்லங்கலட்டி சன சமூக நிலைய பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சம்மாந்துறை காரியாதிகாரி திரு. க. நல்லைநாதன் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை, கிராமசபைத்தலைவர் திரு. கு கதிரையாண்டி பேசுகையில் கூறியதாவது:-

கிராமங்களில் பொருளாதாரத்தை வளர்க்கு முகமாக ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும். எதற்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்கும் மனப்பான்மை மாறவேண்டும். இந்த மன நிலை மாற்ற மடைய சன சமூக நிலையங்கள் உதவி புரிய வேண்டும்.

வட பகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ந. சிவராசா பேசுகையில் சன சமூக நிலையங்கள் சித்திரம், ஓவியம், நாடகம், சங்கீதம் ஆகிய கலைகளை வளர்க்க வேண்டும் என்றும் மக்களின் வாழ்க்கையை சீர்ப்படுத்த வேண்டுல் என்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. ஆ. கிருஷ்ணஸ்வாமி வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. த. செல்வரத்தினம் நன்றி கூறினர். திரு. ந. சிவராசா பரிசுகளை வழங்கினர்.

---

## போலியோ நோய் பரவவில்லை

### டாக்டர் அறிவிப்பு

தெல்லிப்பழை, ஞாயிறு

வர்த்தலை விளானில் இளம்பிள்ளைவாத நோய் பரவியிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையல்ல வென்று டாக்டர் திரு. சுரைசிங்கம் அறிவித்திருக்கிறார். அதே போல காங்கேசன் துறையிலும் போலியோ நோய் பரவவில்லை என்றும் மக்களின் மனப்பயமே தவிர வேறொன்றுமில்லை யெனவும் கூறப்பட்டுள்ளது.

---

## குழந்தையை திருகிக் கொன்றார்?

மாத்தளை, ஞாயிறு

பெயரிடப்படாதநான்குநாள் குழந்தையொன்று, மாத்தளை பிரசவ விடுதியில் இறந்துகிடக்கக் காணப்பட்டது. இந்தக் குழந்தையின் கழுத்தை நெரித்துக்கொன்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இது குறித்து டாக்டர் தாமோதரம் தெரிவிக்கையில் குழந்தையின் கழுத்தில் நகக் குறிகள் காணப்பட்டன என்று கூறினர். குழந்தையின் மரணம் குறித்து விசாரணை நடத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எல். திசநாயக்கா குழந்தை கொலைசெய்யப்பட்டிருக்கிறது எனத் தீர்ப்பளித்தார்.

இறந்த குழந்தையின் தாயாரான கே. ஜீ. கருணவதி (வயது 20) பொலிஸாரினல் பின்னர் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக கருணவதியிடம் கேள்விகள் கேட்ட சமயம் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

"குழந்தை தொடர்ந்து வாந்தியெடுக்கத் தொடங்கியதும், வாந்தியை நிற்பாட்டுவதற்காக நான் சுடுதண்ணீரால் குழந்தையின் கழுத்துக்கு ஒத்தணம் கொடுத்தேன். அப்பொழுது என் நகங்கள் குழந்தையின் கழுத்தைக் கீறியிருக்கலாம். எனக்குஆறுவயதுள்ள ஒரு மகள் உண்டு."

---

யாழ்ப்பாணத்தில்

## அலுமினியத் தொழில்

### சீன நிபுணர்கள்

தெல்லிப்பழை, ஞாயிறு

மாவிட்டபுரத்தில் உள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு சீனவிலிருந்து இரு தொழில் நுட்ப நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். இவர்கள் இருவரும் இத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு அலுமினியத்தொழிலில் நவீன முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

இத் தொழிற்சாலை உரிமையாளர் திரு. சம்பந்தர் அலுமினியத் தொழிலில் புதிய முறைகளை ஆராய்வதற்காக ஜப்பான் சென்றிருக்கிறார்.

---

## புதிய சமுதாயத்தில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவைபுரியும் ஆசிரியர்கட்கு அரசாங்கம் உயர்ந்த சம்பளம் அளிக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆனால் அவர்கள் தங்கள் ஊக்கங்களைக் குறுகிய உத்தியோக முறையில்மட்டும் பிரயோசனப்படுத்தினல் அவர்கள் மக்களுடைய அனுதாபத்தையும் இழந்து கடைசியில் தங்கள் தொழில்நன்மையையும் கெடுத்துக்கொள்வார்கள்.

**அரசியலில் ஆசிரியர்**

இது இதோடு தொடர்புபட்ட இன்னுமொரு கேள்விக்கு நம்மை இட்டுச்செல்கிறது. பொதுவேலைகளில் ஆசிரியர்கள் நேரடியாகப்பங்கு கொள்ளச் சமூகம் அனுமதிக்க வேண்டுமா? பாடசாலைகள் மொத்தமாகச் சமூகத்திற்குச் சேவைசெய்வதால், ஆசிரியர்கள் அரசியலிலிருந்து விலகியிருக்கவேண்டுமென்று ஒரு சாரார் விரும்புகின்றனர் நடைமுறையிலிருக்கும் சமூகக் கட்டுக்கோப்பை நிலைநிறுத்தவும், ஒரு புதிய சமுதாயக் கட்டுக்கோப்பைக் கட்டி எழுப்பவும் பாடசாலை ஒரு கருவியேயன்றி, அது ஒரு சமுதாயக் கட்டுக்கோப்பை உண்டாக்க முடியாது. ஆகையால் சமூகத்தின் ஊழியனை ஆசிரியன் இன்று இருக்கும் சமூக நிலையங்களுக்கு விசுவாசத்தைப் புகட்டவேண்டும் என்கின்றனர். மாணவர் இன்றிருக்கும் பண்பாட்டு நிலையினின்றுஉயர்ந்து, இருக்கும் பண்பாட்டோடு திருப்திகொள்ளவில்லை என்று கண்டால் அதிலுள்ள குறைகளையும் மறுப்புக்களையும் நீக்கத்தக்கவர்களாவதற்கு அவர்களை ஆக்குவது ஆசிரியர்களின் தொழில். கல்வி அதனுடைய புதிய கொள்கைகளுக்கும் பழைய கொள்கைகளுக்குமிடையில் ஒரு நியாயமான சமத்துவமான நிலையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

சமூகத்தின் மற்ற அங்கத்தவரைப்போன்று ஆசிரியர்களுக்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும் தங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவும், பொதுவேலைகளில் தனியாகவோ கூட்டாகவோ பங்குகொள்ளவும், சமுதாயத் திட்டங்களைப் பாதிக்கவும் ஆக்கவும் உரிமையுண்டு. ஜனநாயக சமுதாயத்தில் இவை ஒரு நாட்டுப்பிரஜையின் அடிப்படை உரிமைகள். இவற்றை எந்தச் சமூகமும் தனது மக்களில் அதிக அறிவுபடைத்த ஆசிரியர்களுக்கு மறுக்கமுடியாது.

**ஆசிரியர் அபிப்பிராயம்**

ஆசிரியன் என்று சொல்லிக் கொள்ளும் எந்த ஒரு நல்லாசிரியனும் சமுதாயத்தின் அடிப்படையைத் தொடும் விடயங்களில் நடுவுநிலைமை வகுக்க முடியாது. ஒரு ஜனநாயகச் சமுதாயம் கருத்து மாறுபட்ட விடயங்களில் ஆசிரியர்கள் பங்குகொள்ளுவார்கள் என்றுதான் எதிர்பார்க்கும். ஆசிரியர்களுக்குத் தாங்கள் கற்பிக்கும் விடயங்களைத் தெரிவு செய்யும் உரிமையையும், தெரிந்துள்ள விடயங்களைப் புகட்டும் முறையைத் தெரிவுசெய்யும் உரிமையையும் நாம் அளிக்காவிட்டால், கல்வித் திட்டத்தின் வழிவகைகளை நாம் நன்கு விளங்காதவர்களாவோம். கருத்து வேறுபாடுள்ள விடயங்களினின்று நாம் விலகியிருந்து சுதந்திரமாகச் சிந்திக்கும் சக்திக்குத் தடைபோடுவோமானல், நாம் ஜனநாயகத்தின் அடிப்படையை அழித்துக் கல்வியை ஓர் உயிரற்ற பொருளாக்கி விடுவோம். ஒரு ஜனநாயக சமுதாயத்தில் ஆசிரியர்கள் கொள்கை பரப்புவோராகவும், ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கு மாணவரைத் தயார் செய்பவர்களாகவும் இருக்கக் கூடாதுதான். ஆனால் சமுதாயத்தைப் பாதிக்கும் சக்திகளையிட்டு அவர்கள் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இது ஒரு குறிக்கப்பட்ட ஒரு சாராரையோ, வகுப்பையோ, பிரிவையோ சாந்திராது. "சமூகமும், அதனது அடிப்படை கொள்கைகளும்" என்ற அடிப்படையில்தான் குறிப்பிடப்படும். நாம் நடுவுநிலைமைக்கும் "ஒரு குறிப்பிட்ட நோக்கம்" என்பதற்குமிடையிலுள்ள பாகுபாட்டை உணர வேண்டும். மனிதனின் நிலை ஒன்றேடொன்று சம்பந்தப்பட்டதுதான். எந்த நிலையிலிருந்தும் முற்றாக விலகியிருப்பது மானிடருக்குச் சாத்தியமானதல்ல. அறிவுபடைத்த மானிடனென்ற வகையில், ஒரு குறிக்கப்பட்ட நிலைமையில் அவன் சாத்தியமாக உள்ள பகுதிகளெல்லாம் ஆராய்ந்து, தீர்மானங்களைச் செய்து தன் நடத்தைக்குப் பொறுப்புள்ளவனுமாகிறான். ஆசிரியர்கள் மாணவருக்குத் தீர்ப்புக் கூறவும், சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும் பழக்குவார்களானல், அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்தவர்களாவார்கள். நாளாந்த விடயங்களையிட்டு ஆசிரியர்கள் தங்கள் அபிப்பிராயங்களையோ தீர்ப்புக்களையோ மறைக்க வேண்டிய அவசியமில்லை; அது விரும்பப்படவும் மாட்டாது.

தங்கள் அபிப்பிராயத்தைநேர்மையாகவும், சுதந்திரமாகவும் கூறும் ஆசிரியர்களுள்ள கல்விஸ்தாபனங்களுக்கு ஒரு தீங்கும் வராது. நிறுவப்பட்ட அரசியல் கட்சிகளுக்குக் கருவியாக்கப்படும் தனிப்பட்ட பாடசாலைகளாலும், பிரதேச சங்கப்பாடசாலைகளாலும்தான் கல்விக்குப் பெருந்தீங்கு விளைகிறது.

உங்களுடைய சட்டபூர்வமான தேவைகளைப் பாதுகாக்க யேண்டியதும், கவனிக்கப்படாது இதுவரையும் இருந்த ஒரு தொழிலையிட்டு சமூகத்தை விழிப்படையச் செய்வதும் ஆசிரிய சங்கத்தின் கடமைதான். வரும் பிரச்சினைகளெல்லாவற்றையும் ஒரு விரிந்த அடிப்படையில் நோக்கி நியாயமானதும், சமமானதுமான ஒரு சமுதாயக் கட்டுக்கோப்புக்கு உங்களது அறிவு நிறைந்த ஆதரவைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன். நம்முடைய சமுதாயத்திலுள்ள சமத்துவமின்மையையும், சமூக அநியாயங்களையும் முற்போக்குத் திட்டங்களையும் ஆதரிப்பதால் ஆசிரியர்கள் தங்கள் இனத்திற்கு கூடிய ஊக்கமளிப்பவராவர். உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் நடக்கும் போராட்டம் நீண்டதாக இருக்கப்போகிறது. ஆசிரியர்கள் இதில் நடுவுநிலைமை வகிக்காது பொறுப்புணர்ச்சியோடு தாங்கள் சேவைசெய்யும் மக்களின் அனுதாபத்தை இழக்காது வேலைசெய்ய வேண்டும்.

---

## கூ. மொ. வி. பத்திரிகை

கொழும்பு, ஞாயிறு

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம், மே மாதம் முதல் திகதியிலிருந்து "சந்தோஷம்" என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளியிட முடிவு செய்துள்ளது. சிங்களத்தில் மாதமிரு முறை வெளியாகும் இப் புதிய பத்திரிகையை, இலவசமாக விநியோகிப்பதா அல்லது விற்பனை செய்வதா என்று இன்னும் முடிவு செய்யவில்லை.

தேசிய பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய கட்டுரைகளும், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன கிளைகளின் செய்திகளும் இப்பத்திரிகையில் இடம் பெறும்.

# பாஸ்கட் பந்தாட்டபோதனு ஆசிரியர்களின் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைக் கல்லூரிகளின் பாஸ்கட் பந்தாட்ட சங்கம் இவ்விளையாட்டினை மாணவர்களுக்குப் போதிப்பதற்கு ஒரு பயிற்சி முகாமினை ஏப்ரல் மாதம் 15-ம் திகதியிலிருந்து 19-ம் திகதிவரை நடத்திவைத்தனர். இந்நாலு நாட்களிலும் காலை 6 மணி முதல் 8–30 வரை இவ்வாசிரியர்களுக்கு இவ்விளையாட்டின் நுணுக்கங்களை நேரடியாக அறிவதற்கு ஆடும் விதத்தினை போதனாசிரியர்களான திரு. சுந்தரலிங்கமும் திரு. எஸ். நடராஜாவும் பயிலுவித்தனர். 9-30 மணி முதல் நடுப்பகல் 12-30 மணிவரை இந்த விளையாட்டின் விதிகளையும் நுணுக்கங்களைப்பற்றியும் வகுபபுகள் நடத்தப்பட்டது. திரு. ஆர். ஜே. துரைராஜா இந்தப் பயிற்சி முகாமின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வகுப்புக்களையும் நடத்திவைத்தார்.

நடுப்பகல் போஜனத்திற்கான மூன்று மணித்தியால இடைவேளையின்போது இவ்விளையாட்டு சம்பந்தமான நூல்களைப் படிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து மீண்டும் ஆட்ட மைதானத்தில் ஆட்டத்தினையாடி நுணுக்கங்களையும் ஆட்ட வீரர்களைப் பயிலுவிக்கும் விதத்தினையும் சிறிது சிறிதாக அறிந்துகொண்டனர். இரவு 7-30முதல் இவ்வாட்டம் சம்பந்தமான விளக்கங்களை சொற்பொழிவின் மூலமும் படக்காட்சிகளின் மூலமும் அறிந்து கொண்டனர். இரவு போஜனத்திற்கான ஒரு மணி இடைவேளையின் பின் நள்ளிரவு வரை மிக ஆர்வத்துடன் விளையாட்டு விதிகளையும் அறிந்து கொண்டார்கள். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்ததும் இவ்வாசிரியர்கள் ஓரளவு விளையாட்டைக் கற்றுக்கொண்டனர்.

அடுத்த இரு நாள் மாலையிலும் இவ்வாசிரியர்களுக்கு மத்தியஸ்தர்களாக கடமையாற்ற ஒரு விளையாட்டுப் போட்டி ஏற்படுத்தப்பட்டு இதில் நாலு கோஷ்டிகளும் கலந்துகொண்டன. இதில், நேரம் கணிப்பவர்களாகவும் விவரம் குறிப்பவர்களாகவும், மத்தியஸ்தர்களாகவும் இப்பயிற்சியாசிரியர்கள் கடமையாற்றினர்.

இப்பயிற்சி முகாம் முடிவில், இவ்வாசிரியர்களுக்கு ஒரு விசேஷ பரீட்சை வைக்கப்பட்டது. இப்பரீட்சை முடிவு இவர்களது தரத்தனைப் பிரிக்க உதவியது. இப்பயிற்சி முகாம் கோலாகலவிருந்துடன் முடிவுற்றது. திரு. ஆர். ஜே. துரைராஜா மேற்பார்வையில் நடந்த இப்பயிற்சி முகாமில் சென். பெனடிக்ற் கல்லூரி பயிற்சியாளரும் அ. இ. க. பா. ப. சங்கக் காரியதரிசியுமாகி [illegible] கந்தங்கம் பிரதம பயிற்சியாளராகவும் முகாமின் காரியதரிசியாகவும் கடமையாற்றினர். இவருக்கு உதவியாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பயிற்சியாளரும் வடமாகாண பாஸ்கட் பந்தாட்ட சங்கக் காரியதரியுமாகிய திரு. எஸ். நடராஜா கடமையாற்றினர்.

# ஏஸ் பாஸ்கட் பந்தாட்ட கழகம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், ஞாயிறு

19-ந் திகதி மாலை ஐந்து மணியளவில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி பாஸ்கட் பந்தாட்டத் திடலில் நடைபெற்ற இறுதி விளையாட்டுப் போட்டியில் ஏஸ் பாஸ்கட் பந்தாட்டக் கழகமும் பிளாக் ரேவர்ஸ் கோஷ்டியினரும் கலந்துகொண்டனர். இவ்விளையாட்டுப் போட்டியானது அகில இலங்கை கல்லூரிகளின் பாஸ்கட் பந்தாட்ட சங்கத்தின் பயிற்சி முகாமில் பயிலும் போதனு ஆசிரியர்களால் நடத்தப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டியில் நாலு பாஸ்கட் பந்தாட்ட விளையாட்டுக் கோஷ்டியினர் கலந்துகொண்டனர். இவை விளையாட்டு முகாமைச் சேர்ந்த இரண்டு கோஷ்டியினரும் "ஹனிவ் ஸ்டார்ஸ்" கோஷ்டியினரும் கொழும்பு ஏஸ் பாஸ்கட் பந்தாடடக் கழகத்தின் புதிதாக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளையுமாகும். புதனும் வியாழனும் இந்நாலு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் முதல் ஆட்டமாக பயிற்சி முகாமைச் சேர்ந்த பிளாக் ரேவர்சும் வைற் ரொட்டேர்சும போட்டியிட்டு பிளாக் ரேவர்ஸ் 11-19 புள்ளிகளால் வெற்றிபெற்றது.

கனிவ் ஸ்டார் கோஷ்டியினருக்கும் ஏஸ் பாஸ்கட் பந்தாட்டக் கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் ஏஸ் கழகத்தினர் 24-21 புள்ளிகளால் ஹனிவ் ஸ்டார்ஸைத் தோற்கடித்தனர். மூன்ருவதாக ஏஸ் பந்தாட்டக் கழகத்திற்கும் வைற் ரொட்டேர்சுக்கும் நடைபெற்ற போட்டியில் ஏஸ் கழகத்தினர் வெற்றியீட்டினர். ஹனிவ் கோஷ்டியினருக்கும் வைற் ரொட்டர்சுக்கும் நடந்த போட்டியில் ஹனிவ் கோஷ்டியினர் 3 புள்ளிகள் அதிகப்படியாக எடுத்து வெற்றியீட்டினர். ஹனிவ் கோஷ்டியினருக்கும் பிளாக் ரேவர்சுக்கும் நடந்த போட்டியில் பிளாக்ரேவர்ஸ் கோஷ்டியினர் 25 புள்ளிகளைப் போட்டு 4 புள்ளிகளை அதிகப்படியாகப் போட்டு வெற்றியீட்டினர்.

இறுதிப் போட்டி பிளாக் ரேவர்ஸுக்கும் ஏஸ கோஷ்டியினருக்கும் வெகு மும்முரமாக நடைபெற்றது. இடைவேளையின்போது ஏஸ் கழகத்தினர் 19 புள்ளிகளையும், பிளாக் ரேவர்ஸ் 11 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இடைவேளையின் பின் ஏஸ் கழகத் தலைவர் நடராஜா அதிக புள்ளிகளெடுக்கும் வண்ணம் பந்தை ஆட்டக்காரர்களுக்குக் கொடுத்து ஊக்குவித்தார். அதன் விளைவாக சுந்தரலிங்கம் 15 புள்ளிகளையும் ஜெயராஜா 12 புள்ளிகளையும் பெற்றனர். பிளாக் ரேவர்ஸ் தலைவர் நேசதுரை 10 புள்ளிகளைப் பெற்ருர். ஆட்ட இறுதியின்போது ஏஸ் கழகத்தினருக்கு 29 புள்ளிகளும் பிளாக் ரேவர்ஸ் கழகத்தினருக்கு 21 புள்ளிகளும் கிடைத்திருந்தது.

கல்லூரிகள் சங்கத்தின் இப்பயிற்சி முகாம் போதனு ஆசிரியர்களை மத்தியஸ்தர்களாக கடமையாற்றவும் இப்போட்டியின்மூலம் பயிற்சியளித்தது. இவ்விளையாட்டுப் போட்டிகளுக்கு திரு. வி. தியாகராஜா செயலாளராகக் கடமையாற்றினர்.

## விளையாட்டுப் போட்டி

காத்தான்குடி, ஞாயிறு

"கிழக்கிலங்கை இளைஞர் விவசாயக் கழகத்தினர் நடாத்தும் விளையாட்டுப் போட்டி ஒன்று இன்று நடைபெறவிருக்கிறது. சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் உட்படப் பல விளையாட்டுகள் போட்டியில் இடம்பெறுகின்றன.

## வர்த்தக தூதுகோஷ்டி

கோலாலம்பூர், ஏப் 22

மூன்று அங்கத்தவர்கள் கொண்ட இந்திய வர்த்தக தூதுகோஷ்டியொன்று இங்கு வந்துள்ளது. இரசாயன மருந்து சாமான்களை மலாயாவில் விற்பனைசெய்வதற்கு ஏஜன்ஸிகளை அது நியமிக்கும்.

## ஸ்பெயினுக்கு பிரான்ஸ் உதவி

பாரிஸ், ஏப் 22

ஒரு அணு உலையை நிறுவுவதற்கு வேண்டிய யுரேனியம் கார்பைடை, ஸ்பெயினுக்கு பிரான்ஸ் கொடுத்து உதவியிருக்கிறது.


# யாழ்ப்பாணத்தில் ஓர் புதிய சாதனை !

## வீடு கட்டும் பிரச்சினை தீருவதற்கு

### விஞ்ஞானமுறையில் தயாரித்த

# "கொங்கிறீற்" கற்கள்

அளவுகள் :

18"x 9"x 6"

18"x 9"x 5"



துவாரமுள்ள கற்கள்

அழகான கட்டட வேலைகளுக்குகந்தது



தயாரிப்பாளர்கள்:

ஆனந்தா கொங்கிறீற் வேர்க்ஸ்

இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.

விபரங்கட்கு :

# ஆனந்தா றேடிங் கொம்பனி

41, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.



# ஆசிரியரும் நேர்முக உரையாடல்களும்

## வித்தியாதிபதி சுற்றறிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு
வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டி' சில்வா சமீபத்தில் விடுத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் "அரசினர் பாடசாலை ஆசிரியர்களும் வித்தியாபகுதியின் முகாமையிலுள்ள பாடசாலை ஆசிரியர்களும் தமது கஷ்டங்களைத் தீர்த்து வைத்தற்கு தமது பிரதேசக் கந்தோர் அல்லது உபகந்தோர் நிர்வாக உத்தியோகத்தரையே முதலிற் காணவேண்டுமென்றும் பிரதேசக் கந்தோரால் தீர்த்து வைக்க முடியாத யாதேனும் விடயங்கள் இருப்பினும் அத்தொடர்பில் ஆசிரியர்கள் எவரேனும் தலைமைக் கந்தோரிலேனும் கல்விஅமைச்சிலேனும் உள்ள உத்தியோகத்தரை நேரிற் காண்பது அவசியமானாலும், அங்ஙனம் நேரில் அவர்களைக் காண்பது விரும்பத்தக்கதெனச் சம்மதிப்பின் அவ்வித நேர்முக உரையாடல்களுக்கு அனுமதி அளிக்கப்படுவர்" என்றும் கூறுகினர்.

தொடர்ந்து அச்சுற்றறிக்கை கூறுவதாவது:

"அவ்வாறு நேர்முக உரையாடலுக்கு அனுமதி அளிக்கப்படுமுன் நேர்முக உரையாடற்படிவம் ஒன்றினைப் பூர்த்தி செய்து உரிய அதிகாரியிடம் கொடுக்க வேண்டும்."

## வருடப்பிறப்பில் பட்டமும் பதக்கமும்

உடுப்பிட்டி, ஞாயிறு
வருடப்பிறப்பன்று "கண் திறந்தது" என்ற சமூகக் கிண்டல் நிறைந்த நாடகத்தில் கதாநாயகனாக நடித்த திரு. கே. ஞானசுப்பிரமணியத்துக்கு "கலைக் குரிசில்" என்ற பட்டம் அளிக்கப்பட்டதுடன், பதக்கம் ஒன்றும் வழங்கப்பட்டது. நாடகம் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்றது.

## பூங்காவனத் திருவிழா

உரும்பராய், ஞாயிறு
உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் கடந்த வியாழன் இரவு திருக்கேதீச்சர ஆலயத்தில் பூங்காவனத் திருவிழாவை நடத்தினர்கள். அம்பாள் பூங்காவனத்தில் எழுந்தருளிய பிற்பாடு திரு. சந்தையா வைத்தியநாதன் தலைமையின் கீழ் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. தாமோதரம்பிள்ளை 'பிட்டுக் கிழவி' என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர்களாய சங்கீத பூஷணம் ச. செல்வத்துரையும் ச. தே.குணரத்தினமும்வயலின் வாசித்தார்கள். திருக்கல்யாண சம்பவத்தின் பின் சுவாமி வீதிவலம் வருகையில் கல்லூரி மாணவர்கள் பஜனை செய்தார்கள்.

## சித்திரகுப்த விரதம்

காத்தான்குடி, ஞாயிறு
இந்துக்களின் புனித விரதங்களுள் ஒன்றாகிய 'சித்திரகுப்த விரதம்' கல்லடி உப்போடை, மஞ்சந்தொடுவாய், ஆரையம்பதி ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. புராணப்படிப்பு, அன்னதானம் என்பன சிறப்பாக நடந்தேறின.

## தச்சுத் தொழிலாளர் கஷ்டம்

காத்தான்குடி, ஞாயிறு
கூட்டுத்தாபன ரீதியில் இயங்கி வரும் மஞ்சந்தொடுவாய்த் தச்சுத் தொழிலாளர் பல வித கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கின்றனர். சகல வசதிகளுமிருந்தும் மின்சார இணைப்புக் கிடைக்காதபடியால் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. கல்லடி உப்போடை கிராமசபையின் மின்சார விநியோகம் இத்தொழிற்சாலைக்கு இதுவரை கிடைக்கவில்லை. மின்சார இணைப்பு இல்லாத காரணத்தால் பல ஓடர்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடித்துக் கொடுக்க முடியவில்லை.

இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யக் கோரும் மகஜர் ஒன்று கைத்தொழில் மாவட்ட அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## மண்டைதீவில் போரடிப் போட்டி

மண்டைதீவு, ஞாயிறு
சித்திரைப் பருவத்திலன்று பிற்பகல் மண்டைதீவு திருவெண்காடு ஆதிவைரவர் கோவில் முன்பாக பிரமாண்டமான போரடிப்போட்டி நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான தேங்காய்கள் இப்போட்டிக்காகக் கொண்டுவரப்பட்டிருந்தன. இப்போட்டியில் திரு. பொ. செல்வராசா ஒரு கோஷ்டியின் தலைவராகவும் திரு. நா. முத்துலிங்கம் மறு கோஷ்டித் தலைவராகவும் இருந்து போட்டியை ஆரம்பித்தனர். பலத்த கரகோஷங்களுக்கிடையே ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் இரு கோஷ்டியாரும் விட்டுக்கொடுக்காமல் இருந்தபோதிலும் ஈற்றில் முத்துலிங்க கோஷ்டியினரே வெற்றியைத் தம தாக்கிக்கொண்டனர். இப்போட்டிக்கு திரு. இ. தம்பிஐயா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். பல நூற்றுக்கணக்கானோர் இப்போட்டியைக் கண்டு களித்தனர்.

இப்போட்டி வருடா வருடம் நடைபெற்று வந்ததாயினும் இம்முறைபோல் சிறப்பாய் ஒரு முறையும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியை கோவில் அதிபர் திரு. வை. பொன்னம்பலம் நடத்தி வைத்தார்.

## சுஹ்ராவர்த்தி மனு தள்ளுபடி

டாக்கா ஏப் 21
சமீபத்தில் கைது செய்யப்பட்டு விசாரணையின்றிக் காவலில் வைக்கப்பட்ட முன்னாள் பாக்கிஸ்தான் பிரதமர் எச். எஸ். சுஹராவர்த்தி சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆஜர்மனுவை விசாரிக்க தமக்கு அதிகாரமில்லையென்று தெரிவித்து பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டது.

## ஹாலிவூட் ஹாஷ்ய நடிகை காலமானர்

ஹாலிவூட், ஏப்ரல் 20
ஹாலிவூட் டைரக்டர் ஹல் வல்லிஸின் மனைவியும், ஹாலிவூட் பிரபல ஹாஷ்ய நடிகையுமான லூசி பசென்டா (வயது 67) காலமானரென அறிவிக்கப்படுகிறது.

## விடுதலை கசந்தது!

நைரோபி, ஏப்ரல் 20
கீனியாவில் லாஜிர் என்னுமிடத்தில் உள்ள ஒரு சிறைச்சாலையில் ஒரு ரசமான சம்பவம் நிகழ்ந்தது. ஒரு கைதியின் தண்டனைக்காலம் முடிவடைந்துவிட்டதால், அவனை விடுதலை செய்வதற்கு அதிகாரிகள் தயாரானர்கள். ஆனல், மற்ற கைதிகள் தடுத்தார். ஆகவே பொலிசாரின் உதவி நாடப்பட்டது.

விடுதலை செய்யப்படவிருந்த கைதி, மற்ற எல்லாக் கைதிகளின் அன்பையும் கவர்ந்திருந்தார். ஆகவே அவரை விடுதலை செய்வதை மற்றக் கைதிகள் விரும்பவில்லை. அந்தக் கைதிகளையும் தமது சகாக்களைப் பிரிந்து செல்ல மறுத்துவிட்டார்.

கைதியைப் பொலிசார் உதவியுடன் பலாத்காரமாக விடுதலை செய்வதற்கு முயற்சிக்கப்பட்டது. கைதிகள் தாக்கியதில் ஒரு இன்ஸ்பெக்டரும் 2 சிறைக் காவலாளிகளும் காயமடைந்தனர்.

தண்டனை பூர்த்தியான கைதி 2 தினங்களுக்குப் பிறகே விடுதலையாக முடிந்தது.


ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் [illegible] யிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! [illegible] நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் [illegible] மாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில். [illegible] இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடை [illegible] தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—[illegible] மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழு [illegible] உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிர [illegible] உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழும்மையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மை யும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான்விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

# கலை அரங்கம்

## “ கலைகளினால் தான் கலாசாரம் வளரும்

## சங்கீத ஆசிரியர்கள் சங்கீதத்தை கலையாகச் சாதனை செய்யவேண்டும்”

### இசைவிழா இறுதிநாளில் உதவி வித்தியாதிபதி தலைமையுரை

யாழ்ப்பாணம், திங்கள்

“ஒவ்வொரு சமூகமும் தனது கலைகளினால்தான், தனது கலாசரத்தை வளர்க்க வேண்டுமென இலங்கை அரசாங்கம் கருதி அதற்கு வேண்டிய ஆதரவை அளித்து ஊக்கமளித்துவருகிறது. ரசிகரஞ்சன சபா போன்ற மற்றும் பல ஸ்தாபனங்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்து எதிர்காலத்தில் சங்கீதக் கலை வளர முயற்சிசெய்யவேண்டும்.”

இவ்வாறு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபாவின் இசை விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ரசிக ரஞ்சன சபாவின் 10-ம், 11-ம் ஆண்டு இசை விழா சென்ற புதன்கிழமை தொடக்கம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் கோயில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேஷ பந்தலில் நடைபெற்று நேற்றிரவுடன் முடிவடைந்தது நேற்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்த உதவி வித்தியாதிபதி திரு. சோமசேகரத்தை சபாத் தலைவர் திரு. து. சீனிவாசகம் சபைக்கு அறிமுகம் செய்து வைக்கையில் திரு. சோமசேகரம் கல்விக்கும், தமிழுக்கும், சைவத்துக்கும் செய்துவரும் தொண்டுகளை எடுத்துக் கூறினார்.

திரு. சோமசேகரம் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

### இசைத்தேன் தெவிட்டாது

ரசிகரஞ்சன சபா பல ஆண்டுகளாக இவ்விதமான விழாக்கள் நடத்திசங்கீத வளர்ச்சிக்கு ஆற்றும் சேவை பாராட்டற்பாலது. இசைத்தேன் ஒரு பொழுதும் மக்களுக்குத் தெவிட்டாது. அதற்குக் காரணம் உண்டு. பிறகுநாள் தொடக்கம் இறுதிநாள் வரைக்கும் நமது வாழ்க்கையில் சங்கீதம் தேவைப் படுகிறது. தமிழ்த் தாய் தனது இனிய குழந்தையை தேனினும் இனிய தாலாட்டுக்களால் தொட்டிலிலிட்டு உறங்க வைக்கும் வழக்கத்தை எல்லோரும் அறிவோம். சிறுவயது தொடக்கம் மாணவர்கள் இன்னிசை பாடிக் கடவுளை வணங்குவார்கள். காதலன் காதலிக்கு தன் கீதங்களால் தன் உணர்ச்சிகளை விளக்குகிறான். கிரகஸ்தன் ஆலயத்தில பக்திபரவசமாக இசைபாடி தன் குறைகளைக் கூறி அருள் பெறுகின்றான். ஓங்கார நாதம் காடுகளிலும் வெளியிலும் தொனிக்கின்றது. இறுதிச்சடங்குகளில் பண்ணுடன் பாடும் திருமுறைகள் ஒலிக்கின்றன. இவை எல்லாம் வாழ்க்கையைத் தெய்வீக கீதமாக முடிக்கின்றன.

மேலைத்தேயத்து நாகரிகத்திற்கு அடிமையாக இருந்த காலத்தில் எங்கள் சங்கீதம் இருளடைந்தது. எங்கள் பழக்க வழக்கங்களை மறந்தோம் மேலைத்தேயத்து முறைகளை அனுசரித்தோம். எண்ணையும் தண்ணிரும் கலக்காததுபோல அவர்களுடைய சங்கீதம் எங்கள் வாழ்க்கையோடு இசையவில்லை. எங்கள் தாயகமாகிய தென்னிந்தியா அவ்வளவு ஈனமான நிலைக்குப் போகவில்லை. அங்கு கலையைப் பேணி வளர்த்தார்கள். கர்நாடக சங்கீதத்தை எச்சங்கீதத்துடனும் ஒப்பிடக் கூடிய அளவிற்கு உயர்த்தினர்கள் இப்பொழுது அது ஒரு சாஸ்திரமாக சர்வ கலாசாலையில் இடம் பெற்றிருக்கிறது.

மக்கள் பெருந்திரளாக இவ் விழாவிற்கு வருகின்றனர். சங்கீத ஞானமுடையவர் அதை ரசிக்கின்றனர். ஞானமற்றோர் தாய்மாரோ குழந்தைகளோ, காதலரோ தங்களால் இயன்ற அளவிற்கு பண்டை வாழ்க்கையில் இருந்த நாத வாழ்க்கையை மீண்டும் பெற முயலுகின்றனர். இப்பொழுது இரசிக்கும் தன்மை, பாடும் ஆற்றல் வளர்ந்து வருகின்றன. இவ் விதமான விழாக்களை எவ்வித தீவிரமாக நடத்துகின்றோமோ அவ்வளவு கெதியாக பண்டைக்கால கீத வாழ்க்கையை முசகம் அடைய முடியும். பரீட்சைகளும் ஊதியமும் கலையைக் கொல்லும் என்று கூறுவர். சங்கீததை வாழ்க்கைக்கு இன்பந் தரும் கலையாகக் கருதாமல், பரீட்சையில் சித்தியடைந்து அதிக சம்பளம் பெறும் கருவியாகக் கருதினல் சங்கீத வளர்ச்சி குறையும். ஆகையால்தான் போலும் எங்கள் சங்கீத ஆசிரியர்கள் பாடசாலைகளில் செய்யும் முயற்சிகள் அதிக பயன் தரவில்லை. சங்கீத ஆசிரியர்கள் புனித மனத்துடன் இதை ஒரு கலையாகச் சாதனை செய்து தாங்கள் பெறும் இன்பத்தை மற்றவர்களும் பெற வழிகாட்டினல்தான் சங்கீதக் கலை உயர் நிலையை அடையும்.”

---

# குழந்தைகளுக்கு வாதநோய் தடுப்புமருந்து கொடுபட்டாதா?

## பெற்றோருக்கு சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலுள்ள பாடசாலைகள் மீண்டும் இவ்வாரம் ஆரம்பிக்கின்றன. பாடசாலை ஆரம்பித்த முதல் நாளன்றே தங்களது குழந்தைகளுக்கு வாதநோய் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டதா என்பதைக் கவனிக்கும் படி பெற்றோர்கள் எல்லோருக்கும் சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வாதநோயை முற்றாக தடுப்பதற்கு, இரண்டாவது ‘டோஸ்’ மருந்து அவசியமென்று சுகாதார அதிதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் வதியும் எல்லா குழந்தைகளுக்கும் மற்றும் அதிகமாக ‘போலியோ’ நோய் கண்ட சுற்றுப்பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கும் வாதநோய் தடுப்பு மருந்து கொடுப்பதென்று சுகாதார இலாகா திட்டமிட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை, கொழும்பு குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இளம்பிள்ளைவாத நோயினல் பீடிக்கப்பட்ட 350 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இரண்டாவது தடவையாக வாதநோய் தடுப்பு மருந்து இபொழுது கொடுக்கப்படுகிறது. முதல் தடவையாக வாதநோய் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட நான்கு முதல் ஆறு வார காலத்துக்குள் இரண்டாவது தடவையாக ஊட்ட மருந்து கொடுக்கப்படல் வேண்டும்.

பொதுமக்களுக்காக, நாளை திங்கட்கிழமை கீழ்க்காணும் இரு நிலையங்களும் திறக்கப்படும். கொழும்பு நகரமண்டபம்: காலை 8 முதல் பகல் 12 வரை. பின்னர் பிற்பகல் 2 முதல் 4 வரை. கிரிலப்பனை பிரசவவிடுதி: காலை 8 முதல் பகல் 12 வரை மட்டும்.

---

## சைவசமயபாட. .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் நூல்கள்தான் அதிமாகப் போதிக்கப்படும்.

3. சமயசரித்திரமும், பிள்ளைகள் அந்தந்த வயதில் கிரகிக்கக்கூடிய தத்துவங்கள் மாத்திரமே சேர்க்கப்படும்.

4. சைவசமயத்தைப் பற்றி ஒழுங்காகப் படித்த ஆசிரியர்கள் அதிகக்குறைவு. அவர்கள் போதியஅளவு பயிற்சிபெறும் வரை இந்தத் திட்டம் இலகுவாகவே இருக்கவேண்டும்.

5. கிறிஸ்தவ பாடசாலைகளில் படிக்கும் சைவ மாணவருக்கு இவ்வருடம்தான் முதன் முதலாக சைவபாடத்தைக் கட்டாயமாகக் கற்பிக்கின்றனர். அவர்கள் சிரேஷ்ட வகுப்புப் பரீட்சை சமயபாடத்துடன் எடுக்கவேண்டியுள்ளது. அவர்கள் வசதியையும் கவனித்து, இச்சமயபாடத்தில் தரம் இலகுவாக இருப்பது நலம்.

6. சைவ ஆசிரியர் சங்கம் இந்த நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் சைவ ஆசிரிய சமய கல்விப் பயிற்சிக் கழகத்தை உதவிவித்தியாதிபதியுடன் ஒழுங்கு செய்துவருகின்றனர்.

## மருந்துச்சாலை. . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிருவாகங்கள் திருப்தியாக மேற் கொள்ளப்படாவிட்டால் தொடர்ந்தும் மருந்துச்சாலைக்கு அரசாங்கம் உதவி வழங்க முடியாதெனப் பிரதமர் கூறியுள்ளார்.

மருந்து வகைகள் பெருந் தொகையில் வீணாக்கப்பட்டது பற்றி விளக்கம் சமர்ப்பிக்குமாறு சுகாதார டைரக்டர் அரசாங்க மருந்துச்சாலை அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் றோயல் பார்மஸியின் அதிபரும், கொழும்பு வில்லிபார்மஸியின் சொந்தக்காரரும், மனோகரா தியேட்டரின் குத்தகைக்காரரும், கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. என். இராஜரத்தினம் அவர்களின்சகோதரருமான திரு. நடராஜா துரைரத்தினம் அவர்கள்காலஞ்சென்றுவிட்டார்கள். அன்னாரின் பூதவுடல் இன்று (23-4-62) காலை 8 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

39, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

## திருமண அழைப்பு

### முத்துக்குமாரு — தங்கரத்தினம்

நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.க. கதிரவேலு (ஈஸ்வரி அரிசி, எண்ணை ஆலை ஸ்தாபகர், நல்லூர், யாழ்ப்பாணம்) அவர்களின் புத்திரனும், றோயல் விமானபபடை (சிங்கப்பூர்) யைச்சேர்ந்தவருமான திரு. முத்துக்குமாரு அவர்களுக்கும், திரு. கே. ஆறுமுகம் தம்பதிகளின் மகள் செல்வி தங்கரத்தினத்துக்கும் 25-4-62 புதன்கிழமை இரவு 8 மணிககும் 10 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு ‘ஜோதிஸ்தானி’லுள்ள மணமகள் இல்லத்தில் இந்து முறைப்படி திருமணம் நடைபெறும். உற்றார் உறவினர், நண்பர்கள் ஆகியோர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்புகளில்லை.


இப்பொழுது திரையிடப்படுகிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

கெப்பிட்டல் (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தனபுரி)

விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி...
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி ...
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்


---

## வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

‘விக்னராஜா’ பரிசுக் கிண்ணத்துக்காக
‘ஈழநாடு’ நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..............................

கல்லூரி ..............................

எனது பெயர் ..............................

விலாசம் ..............................

இக்கூப்பனைக் கத்தரித்து ‘கிரிக்கெட் வீரர் 1962’, C/o. ‘ஈழநாடு’, தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.